பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 145

ஞாயிற்றுக்கிழமை
20 ஏப்ரல் 2025

சித்திரை 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



# ஈஸ்டர் தாக்குதல்கள் விசாரணைகள் தீவிரம்!

## மௌனம் காத்தவர்களும் வாய்திறக்கின்றனராம்

### பதுளையில் வைத்து ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 20
மிகவும் முக்கியமான விசாரணை ஒன்றில் (ஈஸ்டர் தாக்குதல்), இதுவரை மௌனம் காத்துவந்தவர்கள் தற்போது கருத்துக்களைக் கூற ஆரம்பித்துள்ளனர். சாட்சியங்களை வழங்குவதற்கு அச்சப்பட்டவர்களும் சாட்சியங்களை வழங்கி வருகின்றனர். விசாரணைகள் வெற்றிகரமாகவும் தீவிரமாகவும் சென்றுகொண்டிருக்கின்றன என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

15

உயிர்ப்புப் பெருவிழா வழிபாடுகள்

## கிறிஸ்தவத் தலங்களுக்கு 24 மணிநேரப் பாதுகாப்பு!

கொழும்பு, ஏப். 20
உயிர்த்தஞாயிறு தின வழிபாடுகள் மற்றும் ஆராதனைகளை முன்னிட்டு, வடக்கு, கிழக்கு உட்பட இலங்கையின் அனைத்துக் கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆலயங்களும் 24 மணிநேரப் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்

15

## வாக்காளர்கள் மீது ஜனாதிபதி அழுத்தம்

### பவ்ரல் அமைப்பு கண்டனம்

கொழும்பு, ஏப். 20
உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்பு, வாக்காளர்கள் மீது மறைமுக அழுத்தங்களை வழங்கும் செயற்பாடாகும் என்று பவ்ரல் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்

15



## வவுனியாவில் கோரவிபத்து வாகனச் சாரதி அருந்தப்பு!

### சம்பவ இடத்தில் நிற்காமல் தப்பியோட்டம்

வவுனியா, ஏப். 20
வவுனியா பூந்தோட்டம் பகுதியில், வாகனமொன்று கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்தைத் தகர்த்ததுடன், அருகிலிருந்த வீட்டின் வேலிகளையும் இடித்துச் சேதப்படுத்தியுள்ளது.

15

## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

### ஆவரங்காலில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20
யாழ்ப்பாணம் ஆவரங்கால் மேற்குப் பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
பரமு ஜெயநந்தன் (வயது 50) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இறப்புத்

15

## பரப்புரைக்காக இன்று வவுனியாவில் பிரதமர்

வவுனியா, ஏப். 20
பிரதமர் ஹரிணி அமரசூரிய தேர்தல் பரப்புரைக்காக இன்று வவுனியாவுக்கு வருகைதரவுள்ளார்.
வவுனியா ஈரப்பெரியங்குளம் பகுதியில் இன்று காலை 9 மணியளவில் இடம்பெறும் தேர்தல் பரப்புரையில் கலந்து கொள்வதற்காகவே பிரதமர் ஹரிணி வருகை தரவுள்ளார். இதைத் தொடர்ந்து நெடுங்கேணி, செட்டிகுளம், மெனிக்பாம், உக்கிளாங்குளம் பகுதிகளில் இடம்பெறும் தேர்தல் பரப்புரைகளிலும் பிரதமர் ஹரிணி கலந்து கொள்ளவுள்ளார். (ம-110)



## இந்த மாதத்தில் மட்டும்

## 100,000 சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, ஏப். 20
இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் இலங்கைக்கு சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகள் வருகைதந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

15



'இன்னும் எவ்வளவு காலம்தான் உப்பிடி விசாரிச்சுக் கொண்டே இருக்கப்போயினமோ தெரியேலை'

வழக்கு நிலுவையிலுள்ள

## உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் ஒத்திவைப்பு?

கொழும்பு, ஏப். 20
வழக்குகள் நிலுவையில் உள்ள சபைகளுக்குத் தேர்தல் திகதி பின்தள்ளிப் போவதற்குக் கூடுதலான சந்தர்ப்பங்கள் உள்ளன என்று தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தமது கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.
தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கும், மாவட்ட தெரிவத்

15

## அன்னை பூபதிக்கு நேற்று தாயகத்தில் அஞ்சலிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 20
அன்னை பூபதியின் 37ஆவது அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுத் தாயகத்தில் பரவலாக இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணத்தின் இதர பகுதிகள், கிளிநொச்சி, மட்டக்களப்பு.

15

கடந்த வருடம் யாழ். போதனாவில்

## விலங்குக் கடிக்காக சிகிச்சைபெற்ற ஐந்து பேர் பரிதாபமாக உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 20
கடந்த வருடம் பல்வேறுபட்ட விலங்குகளின் கடிக்கு இலக்கான நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோரில் ஐவர் உயிரிழந்துள்ளனர் என்று

15

## சஞ்சீவி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 19.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4048 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 28 32 57 59 |
| விசேட எழுத்து | X |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 19.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1115 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 27 39 48 60 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 19.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 074 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 3 7 1 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 19.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2154 |
| ஆங்கில எழுத்து | O |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 13 14 15 55 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 19.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5806 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 9 6 9 5 3 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 19.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1836 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 06 22 36 80 |
| விசேட எழுத்து | Z |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 19.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0381 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 9 5 3 6 |

# ஜி.எஸ்.பி.பிளஸா? பயங்கரவாதத் தடைச் சட்டமா?

## அரசாங்கம் தடுமாற்றம்; சிங்கள நாளிதழ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 20

**ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைத் தக்கவைத்துக்கொள்வதற்காக, வெகு விரைவில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதென சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இதுதொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு இலங்கை வரவுள்ளது. மனித உரிமைகள், தொழில்சார் உரிமைகள், நல்லாட்சி, சுற்றுச்சூழல் உட்பட 27 சர்வதேச விதிமுறைகளை அடிப்படையாகக்கொண்டே மேற்படி வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிவருகின்றது.
மனித உரிமை மீறல் உள்ளிட்ட காரணங்களுக்காக 2010 ஆம் ஆண்டு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனினும், 2017 ஆம் ஆண்டுமுதல் மீள வழங்கப்பட்டுவருகின்றது.
பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம், புதிய அரசியலமைப்பு உள்ளிட்ட உத்தரவாதங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், அவை நிறைவேற்றப்படவில்லை.
தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என அறிவித்துள்ளது. இது தொடர்பில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.
பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டாலும், சர்வதேச பயங்கரவாதத்துக்கு முகங்கொடுக்கும் வகையில், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு உட்பட்ட வகையில் புதியதொரு சட்டத்தை கொண்டுவருவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது - என்றுள்ளது. (ச-44)



# உகண்டாவில் சொத்து; உறுதிப்படுத்துங்கள்

## ராஜபக்சக்கள் சவால்

அநுராதபுரம், ஏப். 20
உகண்டாவுக்கு விமானங்களில் எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் ராஜபக்சக்களின் பணத்தை நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் பொய்யென்பதை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் மன்னிப்புக்கோர வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சவால் விடுத்துள்ளார்.
அநுராதபுரம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
அமெரிக்காவின் வரிக்கொள்கையை எதிர்கொள்வதற்குரிய திட்டங்கள் அரசாங்கத்திடம் இல்லை. மாறாக ராஜபக்சகளை விமர்சித்துக்கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கே முற்படுகின்றனர்.
நாடாளுமன்றத்தில் தற்போது சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அச்சட்டத்தைப் பயன்படுத்தி, ராஜபக்சக்கள் உகண்டாவில் பதுக்கிவைத்துள்ளனர் எனக் கூறப்படும் பணத்தை இலங்கைக்குக் கொண்டுவரவேண்டும். அதற்கு நாம் முழு ஒத்துழைப்பு வழங்குவோம். முடியாவிட்டால் தாம் கூறியது பொய்யென்பதை ஏற்று மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் - என்றார். (ச-44)

# அநுர அரசாங்கத்தால் ஒரு கல்லில் இருமாங்காய்

கொழும்பு, ஏப். 20
வடக்கு, கிழக்கில் வாக்குவேட்டை நடத்துவதற்காகவும், புலம்பெயரிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவுமே பிள்ளையானை அரசாங்கம் கைது செய்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
ரோஹண விஜேவீர போன்று பிரபாகரனும் தலைமறைவு வாழ்க்கையே வாழ்ந்தார். புலிகள் அமைப்பின் தாக்குதல்களை கருணா அம்மானே வழிநடத்தினார். அவரின் கை ஆள்தான் பிள்ளையான்.
கருணாவும், பிள்ளையானும் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறிய பின்னரே அவ்வமைப்பு வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. ஆனையிறவு உள்ளிட்ட இடங்களை கருணா அம்மானே கைப்பற்றினார்.
புலிகள் அமைப்பில் கிழக்குப் போராளிகளே அதிகம் இருந்தனர். கருணா இல்லாது இருந்திருந்தால் படையினரால் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றி இருக்க முடியாது. எதிர்காலத்தில் தம்மைப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே புலிகள் அமைப்பில் இருந்து விலகி கருணா, பிள்ளையான் ஆகியோர் அரசாங்கத்தை ஆதரித்தார்கள். ஆனால் அவர்கள் காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளனர்.
வடக்கு, கிழக்கில் தமிழ் வாக்குகளைப் பெறுவதற்கும், புலிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவுமே பிள்ளையான் பிடிக்கப்பட்டுள்ளார்- என்றார். (ச-44)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 19.04.2025 | சனிக்கிழமை | 0514 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| J | 5 0 6 7 0 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.04.2025 | சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2780 | E | 07 08 37 45 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.04.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 09 52 59 79 | 4941 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 19.04.2025 | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0665 | 11 33 49 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.04.2025 | சனிக்கிழமை | |
| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 36 46 52 53 | 4492 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 19.04.2025 | சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 11 | 03 47 49 57 | 1956 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.04.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 29 44 61 67 | 2606 |

# நடைபவனி

யாழ்ப்பாணம், ஏப். 20
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் முன்னெடுக்கும் பொன்விழாக் கொண்டாட்டத்தின் முன்னேற்பாட்டு நிகழ்வாக மாபெரும் நடைபவனி நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.
குறித்த மாபெரும் நடைபவனி பரமேஸ்வராச் சந்தி, கந்தர்மடச் சந்தி, இந்துமகளிர் கல்லூரிச் சந்தி, கலட்டிச் சந்தி ஊடாக மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவாயிலைச் சென்றடையும். நடைபவனியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

# கோண்டாவிலில் சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 20
கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கோண்டாவில் சந்தியிலுள்ள கடைத்தொகுதியில் சனசமூக நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் குமரன் விளையாட்டுக்கழக லண்டன் கிளையின் தலைவர் இரட்ணம் யோகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பரப்புரை மேடைகளில் ஜனாதிபதி அதிகாரத்தொனி!

## முன்னாள் தவிசாளர் நிரோஷ் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஏப்.20**

**ஆளும் கட்சியின் ஆளுகைக்குள் உள்ளூராட்சி மன்றங்கள் இருந்தால் மட்டுமே மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதியொதுக்கமுடியும் எனத் தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி பேசுவது ஜனநாயக விதிமீறலாகும் என்று வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றங்களின் நிதி விடயத்தில் அந்தந்த சபைகளின் தலைவர்களுக்கே அதிகாரம் காணப்படுகின்றது. உள்ளூராட்சி என்பது ஆட்சி முறைமை. அது வரிகளையும் வருமானங்களையும் திரட்டுவதற்கும் தீர்மானிப்பதற்கும் செலவிடுவதற்கும் அதிகாரம் பொருந்திய சட்டரீதியான ஆட்சி அலகாகும்.

உள்ளூராட்சி மன்றங்கள் உலகளவில் வரலாற்று ரீதியில் உருவாக்கப்பட்ட ஆட்சிமுறை என்ற அடிப்படையில் மத்திய அரசாங்கத்திடம் இருந்து அதிகாரப்பகிர்வைப் பெற்றுள்ளன. ஜனநாயக மற்றும் சட்டரீதியிலான அந்தஸ்தாக உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.

மத்திய அரசாங்கம் சர்வதேசத்திடம் பெறும் உதவிகள் மக்களின் நலன் புரி விடயங்களை மையமாகக் கொண்டுள்ளன. அவ்வாறு அரசாங்கம் பெறும் உதவிகளை ஜனாதிபதி தனது கட்சிக்காரரின் சபைக்கு மட்டும்தான் கொடுப்பேன் எனக் கூறமுடியாது. அவ்வாறு ஜனாதிபதி செய்தால் உதவிகளை சர்வதேசம் வழங்காது. ஆகவே அரசாங்கம் போதையில் பேசுகின்ற தெருச் சண்டியர்கள் போல விலாசம் எழுப்பக் கூடாது - என்றார். (ச-33,26)



# தேர்தல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.20

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் தொடர்பாகத் தலைமைதாங்கும் சிரேஷ்ட அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு, யாழ். மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர் இ. சசீலன் விளக்கமளித்தார். (ச-25, 27,66)

# 'காட்டிக்கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். கிராமிய உழைப்பாளர் சங்கம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மரியநாயகம் நியூட்டன் எழுதிய 'காட்டிக்கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்' நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று யாழிலுள்ள மண்டபத்தில், யாழ் கிராமிய உழைப்பாளர் சங்கத்தலைவர் என்.இன்பம் தலைமையில் நடைபெற்றது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர், உலக மீனவ சம்மேளன பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பொ.கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டு நூலினை வெளியிட்டுவைத்தனர். வடமாகாண கடற்றொழிலாளர் இணைய ஊடகப் பேச்சாளர் அ.அன்னராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், கிராமிய அமைப்பினர்கள், மீனவ சமூகத்தினர் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-27)








# அன்னை பூபதிக்கு வவு.வில் அஞ்சலி

வவுனியாவில் அன்னை பூபதியின் 37ஆவது நினைவுதினம் தமிழர்தாயக காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது அன்னாரது திருவுருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து கருத்துத் தெரிவித்த காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர், தமிழ்மக்களின் இறைமையைப் பாதுக்காப்பதற்காகவும்,உரிமைகளைக் காக்கவும் தன்னை அர்ப்பணித்த அன்னைக்கு அஞ்சலிசெலுத்துகின்றோம்.

தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட விடயத்தை சர்வதேசப் பொறிமுறையூடாகவும் சர்வதேச விசாரணையூடாகவும் தீர்க்கமுடியும்.எதிர்காலத்திலும் தமிழ் இறையாண்மை எமக்குத் தேவை என்ற விடயத்தைத் தொடர்ச்சியாக சர்வதேசத்துக்கு உரத்துச்சொல்வோம் - என்றனர். (ச-110)





மீசாலை வடக்கு கான்றைச் சாட்டி அலாக்கிரக பூதவராத தான்தோன்றிஸ்வரர் விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. (ச-28)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 20

இந்தியப்படைகளின் ஆக்கிரமிப்புக்கு எதிராக 31 நாள்கள் உண்ணா நோன்பிருந்து தாயக விடுதலைக்காக உயிர்நீத்த தியாகதீபம் அன்னை பூபதியின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது அகவணக்கம் செலுத்தப்பட்டு, அன்னை பூபதியின் திருவுருப்படத்துக்கு சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னை பூபதி தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-27-66-20,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்குநீரிணையை நீந்திக்கடந்து மாற்றுத்திறனாளி வீரர்கள் சாதனை



மன்னார், ஏப். 20

இந்தியாவைச் சேர்ந்த 8 பேர் கொண்ட குழுவினரு டன் இணைந்து, ஒரு காலை இழந்த மாற்றுத்திறனாளி நீச்சல் வீராங்கனை ஒருவர், இலங்கை தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையிலான பாக்கு நீரிணையை 11 மணி 5 நிமிடத்தில் நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்திக் கடப்பதற்காக கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட வட மாநிலத்தைச் சேர்ந்த 10 பேர் கொண்ட நீச்சல் வீரர்கள் குழு இந்திய-இலங்கை இரு நாட்டு அரசிடமும் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்கள்.

அனுமதி கிடைத்த நிலையில், 8 பேர் கொண்ட குழுவினர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை தலைமன்னாரில் இருந்து அதிகாலை 5.50 க்கு கடலில் குதித்து நீந்தத் தொடங்கி மதியம் 2.20 மணி அளவில் தனுஷ்கோடியைச் சென்றடைந்தனர்.

இவர்கள் ரிலே முறையில் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரையான தூரத்தை 8 மணிநேரம் 30 நிமிடத்தில் நீந்திக் கடந்தனர்.

மேலும் இரு மாற்றுத்திறனாளிகள் தனியாக நீந்திக் கடந்தனர். இவர்களில், முன்னதாக பாரா நீச்சல் போட்டிகளில் கலந்துகொண்டு மூன்று பதக்கங்களைப் பெற்ற மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த சஷ்ருதி நக்காது என்ற நீச்சல் வீராங்கனைக்கு வலது காலில் பிறவிக் குறைபாடு காரணமாக மேல் மூட்டுத் துண்டிக்கப்பட்டு, செயற்கையாக வடிவமைக்கப்பட்ட கால் பொருத்தப்பட்டுள்ளது.

இவர் அதிகாலை 5.50 மணி அளவில் தலைமன்னார்க் கடலில் குதித்து நீந்தத் தொடங்கி மாலை 4.55 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனைக் கரையை அடைந்தார். அதேபோல மற்றொரு மாற்றுத்திறனாளியான பல்கா கணேஷ் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல் முனை வரை 10 மணி 30 நிமிடத்தில் நீந்திக் கடந்தார்.

(ச-25,56)

# விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பலன்கள் - 2025






## எடுத்த காரியங்களில் ஜெயம்

**கன்னி ராசிக்காரர்களுக்கு,**

தியாக உணர்வும், திடச் சிந்தனையும் கொண்ட நீங்கள் சதா சர்வ காலமும் சிந்தித்துக்கொண்டே இருப்பவர்கள். உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்தில் துலாம் ராசியில் சந்திரன் நிற்கும்போது விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். புதிய முயற்சிகள் வெற்றியடையும். குழந்தையில்லா தம்பதிக்கு இனிக் குழந்தை பாக்கியம் உண்டாகும்.

மே 18ஆம் திகதி நடக்க உள்ள ராகு கேது பெயர்ச்சி, சிறப்பான பலன்களைத் தரும். சோதனைக்காலம் முடிந்து நன்மை நடக்கும். சோர்வு நீங்கி சுறுசுறுப்படைவீர்கள். கணவன் மனைவிக்குள் இருந்து வந்த பனிப்போர் விலகும். ஒருவரையொருவர் பரஸ்பரம் புரிந்துகொள்வீர்கள்.

இதுவரை தடைபட்டுக்கொண்டிருந்த பிள்ளைகளின் கல்யாணப் பேச்சுவார்த்தையில் இனி முன்னேற்றம் உண்டு.

குடும்பத்தில் சின்னச் சின்ன கோப தாபங்கள் வந்துபோகத்தான் செய்யும். அதையெல்லாம் பெரிதாக்கிக்கொள்ளவேண்டாம். உடல்நலத்தில் கூடுதல் கவனம்செலுத்துங்கள். யோகா, தியானம் செய்வது நல்லது. கணவர்வழி சொந்தங்களிடம் நேசமாகப் பழகுவீர்கள். உற்சாகம் பொங்கும். என்ன செய்வதென்ற குழப்பநிலை மாறும். பெற்றோரின் ஆலோசனையோடு தெளிவான முடிவை எடுப்பீர்கள். மனதுக்குப் பிடித்த மணமகன் அமைவார். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிட்டும். படிப்பிலிருந்து மந்தநிலை மாறும். கெட்ட நட்பு வட்டத்தைத் தவிர்த்துவிட்டு படிப்பில் அக்கறை காட்டுவீர்கள். தாய் தந்தையரின் பேச்சைக் கேட்டு நடந்துகொள்ளுங்கள்.

கொடுக்கல் வாங்கலில் நிம்மதி உண்டாகும். வரவேண்டிய பாக்கிகள் எளிதில் வசூலாகும். எனினும் குரு 10 இல் வருகிறார். கண்டபடி கடன் வாங்கி வியாபாரத்தை விரிவுபடுத்திக்கொண்டிருக்கவேண்டாம்.

மேலதிகாரிகளிடம் வாக்குவாதங்கள் வந்துபோகும். வேலைகளை முடிப்பதில் கவனம் தேவை. அலட்சியம் வேண்டாம். அடிக்கடி விடுப்பில் செல்லாதீர்கள். சக ஊழியர்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்ளவேண்டாம். எதிர்பாராத இடத்துக்கு திடீரென மாற்றப்படுவீர்கள். பழைய அதிகாரிகள் உதவுவார்கள். கலைத்துறையினருக்கு வாய்ப்புக்கேட்டு அலைந்த நிலைமாறி, உங்களைத் தேடி நல்ல நிறுவனத்திடமிருந்து வாய்ப்புகள் தேடி வரும். அதேசமயம் ஒப்பந்தப் பத்திரங்களில் கையெழுத்திடும்போது நன்குபடித்துப்பார்த்துக் கையெழுத்து போடுவது நல்லது.

**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு நெடுநாள் கனவை நனவாக்குவதாக அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லருவி லலீசனுக்கு சிறப்புக் கௌரவம்

யாழ்ப்பாணம், ஏப். 20

இந்திய தமிழ்நாடு ஆளுநரிடமிருந்து அண்மையில் தமிழ் இலக்கிய ஆளுமைக்கான விருது பெற்றுக்கொண்ட சொற்பொழிவாளரும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வருமான செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாகக் கௌரவிக்கப்பட்டார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றபோதே இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. (ச-66)



தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி நகர கட்சி அலுவலகத்தை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்துவைத்தார். (ச-25,113)

## வவுனியா மருத்துவமனையின்

# பிரேத அறை குளிரூட்டி பழுது அரசாங்கம் அக்கறையில்லை

வவுனியா,ஏப்.20

ஆளும்கட்சியைச் சேர்ந்த பிரதி அமைச்சர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் வன்னிப் பிரதேசத்தில் இருந்தபோதிலும் வவுனியா மருத்துவமனையில் பல நாள்களாக இயங்காமல் இருக்கின்ற பிரேத அறையின் குளிரூட்டி சீர்செய்வது தொடர்பில் தமது சுகாதார அமைச்சின் கவனத்துக்குக்கொண்டுசெல்லாமை கவலைக்குரிய விடயம் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மருத்துவமனையின் பிரேத அறையில் குளிரூட்டி பல மாதங்களாக செயற்படாமல் காணப்படுகின்றது. இதன் காரணமாக மரணமடைந்தவர்களின் உறவினர்கள் தமது சொந்தச் செலவில் சடலத்தை செட்டிக்குளம் மருத்துவமனையில் குளிரூட்டியில் வைத்து மீண்டும் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டுவரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தமது ஆட்சியில் பாலும் தேனும் ஓடும் என்று அறிக்கை விட்டு மக்களைப் பொய்யாகத் திசைதிருப்பும் அரசாங்கம் வெறும் வாய்ச்சவால் விடுகிறது. மக்கள் நலன்சார் விடயங்களில் கவனம்செலுத்தவேண்டும்- என்றார். (ச-22,110)



# வன்முறைத் தடுப்பு கலந்துரையாடல்

பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயற்பாட்டுக் குழுக் கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது பால்நிலைசார் வன்முறைக்கு எதிரான செயற்பாடுகள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. பிரதேச செயலகங்களுடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்த வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (ச-25,66)

## நீர்வேலி தெற்கில்

# முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப். 20

நீர்வேலி தெற்கில் முதியோர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாதர் அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தின்போதே முதியோர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த கூட்டத்தில் 140 வரையிலான முதியோர் கலந்துகொண்டனர். கோப்பாய் பிரதேச செயலக அதிகாரிகள் முன்னிலையில் சங்க நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தற்போது முதியோர்களுக்கான ஆன்மீகச் சுற்றுலா ஒன்றை மேற்கொள்ள சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சங்கத்தின் பொருளாளர் இ. கணேசமூர்த்தி தெரிவித்தார். (ச-25, 17)

# அநுரவின் மேடைப்பேச்சுகள் ஆட்சிமுறைமைக்கு அபகீர்த்தி

## மன்னார் பொது அமைப்புகள் சுட்டிக்காட்டு



மன்னார், ஏப். 20

பரப்புரைக் கூட்டத்துக்காக மன்னாருக்கு வருகைதந்திருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க காற்றாலை விடயம் சம்பந்தமாக முன்னுக்குப் பின் முரணான தகவலை வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். அவருடைய பேச்சைப் பார்த்தால் 'கொய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம், உள்ளே இருப்பது ஈரும் பேனுமாம்' என்ற பழமொழி ஞாபகம் வருகின்றது.

இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காற்றாலை மின் உற்பத்தித்திட்டம் மற்றும் கனியமணல் அகழ்வு போன்ற திட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இருப்பினும் தற்போது மன்னார் சௌத்பார் பகுதியில் நான்கு காற்றாலை மின்திட்டத்துக்கான வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. அதற்கான புகைப்பட ஆதாரங்கள் உள்ளன. தாழ்வுபாட்டில் 10 காற்றாலைகள் அமைக்கவும் அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

மேலும் கனியமணல் அகழ்வு நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன. அதற்கான சுற்றாடல் மதிப்பு அறிக்கை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தேர்தல் மேடையில் வாக்குப்பெறுவதற்காக நடைபெறுகின்ற சம்பவத்தை இல்லை என்று கூறுவது அரசின் ஆட்சிமுறைமைக்கான அவமானமாகும்- என்றார். (ச-25,66)

யாழ்ப்பாணம் உரும்பிராய் வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்தின் 72 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, விளையாட்டுப்போட்டிகள் மற்றும் கலாசார நிகழ்வுகள் என்பன நடைபெற்றன. உரும்பிராய் மேற்கிலுள்ள வைத்தீஸ்வர சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற நான்காம் நாள் நிகழ்வில் பிரபல தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சனின் புதல்வன் அபியுத்பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்துவைத்தார். (ச-41-20)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயல்படு வீர்கள். உறவினர்கள் வரு கையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதி கரிக்கும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். இன்று குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். தாயின் விருப் பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவ னம் தேவை. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்படும் என்பதால் எச்சரிக்கை அவசியம்.

**கடகம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். விட்டுப்பிடித்துச் செல்லவும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்து செயல்படவேண்டிய நாள். கணவன் மனைவிக்கிடையே மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனு சரித்துச் செல்வது நல்லது. வீண் செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு வார்த்தை சாதகமாக முடியும்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும். முக்கிய முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.


**விருச்சிகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இளைய சகோதரர்கள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள் வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம் படும். உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டா லும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். அதிகாரிகள் கண்டிப்பாக நடந்துகொள்வார் கள்.

**கும்பம்:** எதிலும் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். தந்தை யின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். திடீர்ச் செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். வியா பாரத்தில்விற்பனைவழக்கம்போலவேஇருக்கும்.

**மீனம்:** தந்தைவழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். நீண்டநாள்களாக தொடர்பில் இல்லாத நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டு பேசுவது உற்சாகம் தரும்.




# ராஜஸ்தானை சாய்த்தது லக்னோ

**ஐ.பி.எல். தொடரின் 36 ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணி.**

இந்த ஆட்டம் நேற்று இரவு ஜெய்ப்பூரில் நடைபெற் றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணி துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது.

மிச்செல் மார்ஷ் மற்றும் நிக்கோலஸ் பூரன் ஆகி யோர் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். மார்ஷ் 4 ஓட்டங்களுடனும், பூரன் 11 ஓட்டங்களுடனும் ஆட் டமிழந்தனர். அதன்பின்னர் ரிஷப் பண்ட் 9 ஓட்டங் களுடன் வெளியேறினார். மார்கிராம் 66 ஓட்டங்க ளையும், ஆயுஷ் பதோனி 50 ஓட்டங்களும் எடுத்த னர். சத்தீப் சர்மா வீசியி இறுதிப் பந்துப்பரிமாற்றத் தில் அப்துல் சமத் 4 சிக்சர்கள் விளாச லக்னொ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 180 ஓட்டங்களைப் பெற்றது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுக்களை யும், டிசப் பாண்டே மற்றும் ஆர்ச்சர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

181 ஓட்டங்களை வெற்றி இலக்கை நோக்கித் துடுப் பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுக் களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக ஜெய்ஸ்வால் 74 ஓட்டங்களையும், ரியான் பராக் 39 ஓட்டங்களையும், வைபவ் சூர்ய வன்ஷி 34 ஓட்டங்களையும் பெற்றனர். 14 வயதான வைபஸ் சூர்யவன்ஷி ஐ.பி.எல். வரலாற்றில் மிகவும் வயது குறைந்த வீரராவார்.

(எ-இ)

# பட்லரின் அதிரடி ஆட்டத்தால் டெல்லியை வீழ்த்தியது குஜராத்

ஐ.பி.எல். தொடரின் 35ஆவது லீக் ஆட்டத்தில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை 7 விக்கெட்டுக்களால் வீழ்த்தியது குஜராத் டைட்டன்ஸ் அணி.

அகமதாபாத் நகரில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் டைட்டன்ஸ் களத்தடுப் பைத் தெரிவு செய்தது.




முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 203 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணிக்காக கருண் நாயர் 31 ஓட்டங்களையும், ராகுல் 28 ஓட்டங்களையும், அக் சர் படேல் 39 ஓட்டங்களையும், ஸ்டப்ஸ் 31 ஓட்டங்க ளையும், அசுதோஷ் சர்மா 37 ஓட்டங்களையும் பெற் றனர். பந்துவீச்சில் குஜராத் அணி சார்பில் பிரசித் கிருஷ்ணா 4 விக்கெட்டுகளையும், சிராஜ், அர்ஷத் கான், இஷாந்த் சர்மா, சாய் கிஷோர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

204 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை குஜராத் விரட்டியது. சாய் சுதர்ஷன் உடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ஷுப்மன் கில், 7 ரன்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த ஜோஸ் பட்லர் உடன் இணைந்து 60 ஓட்டங்கள் இணைப்பாட் டம் அமைத்த, சாய் சுதர்ஷன் 21 பந்துகளில் 36 ஓட் டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ரூதர்போர்ட் உடன் இணைந்து ஜோஸ் பட்லர் 119 ஓட் டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். ரூதர்போர்ட், 34 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். குஜராத் அணிக்காக மூன்றாவது துடுப்பாட்ட வீரராகக் களம் கண்ட பட்லர், இறுதி வரை ஆட்டமிழக்காமல் 54 பந்துகளில் 97 ஓட்டங்கள் எடுத்தார். 19.2 பந்துப்பரி மாற்றங்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 204 ஓட் டங்கள் எடுத்து வெற்றி பெற்றது குஜராத். இந்தத் தொடரில் டெல்லி கபிட்டல்ஸ் அணிக்கு இது இரண்டா வது தோல்வியாக அமைந்துள்ளது.

(எ-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

இருள் இருள் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருப்பதைவிட ஒரு சிறிய மெழுகுவர்த்தியைத் தேட முயற்சிசெய்.

– கன்பூசியஸ் –




# பிள்ளையான் என்னும் பெரும் காய்ச்சல்!

கொழும்பில் 'பிள்ளையான்' காய்ச்சல் தீவிரம் பெற ஆரம்பித்திருக்கின்றது. கம்மன்பில, வீரசேகர, நாமல் ராஜபக்ச என பல முன்னாள் அமைச்சர்களும், முன்னாள் அரச உயர் மட்டங்களும், 'உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு பிள்ளையானைப் பொறுப்பாக்குவதற்கு சதி நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன' என்று புலம்பித்தள்ள ஆரம்பித்திருக்கின்றனர். எதற்கெடுத்தாலும் புலிப் புராணம்பாடி சிங்கள மக்களைப் பயங்காட்டும் கடந்தகால ஆட்சியாளர்கள் இப்போதும்கூட அதே நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றனர். ஏன் இந்தப் பரபரப்புகள்? எதற்காக இத்தனை கருத்துப்பகிர்வுகள்?

கோத்தாபயவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காகவே, உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்ற குற்றச்சாட்டு கடந்த சில வருடங்களாகவே முன்வைக்கப்பட்டுவருகின்றது. தற்போது, பிள்ளையானுக்காகக் குத்திமுறிபவர்கள் கோத்தாபயவின் ஆட்சியில் அமைச்சர்களாகவும், அரச முக்கியஸ்தர்களாகவும் இருந்தவர்கள்தான். எனவே, தம்மீதான குற்றச்சாட்டை நீக்கிக்கொள்ளும் வாய்ப்பாகத்தானே அவர்கள் இந்த விசாரணைகளைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறிருக்கையில், விசாரிக்கவே வேண்டாம் என்று கூறுவதற்கான காரணம் என்ன? உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சந்தேகநபர்களை அடையாளங்காட்டி அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவே அநுர அரசாங்கத்தால் முடியும். அவர்களின் குற்றங்கள் உறுதிப்படுத்தப்படுவதும், தண்டனைகள் வழங்கப்படுவதும் நீதிமன்றத்தின் கைகளில்தான் அமைந்திருக்கின்றது. எனவே, பிள்ளையானுக்காகத் தற்போது வலுவாக முன்வைக்கப்படும் குரல்கள், இந்த விடயத்தின் 'குற்றப்பின்னணியை' காப்பாற்றுவதற்கான- இருட்டடிப்புச் செய்வதற்கான குரல்களா? என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கின்றது.

'பச்சை மரத்துக்கே இந்நிலை நேரின், பட்ட மரத்தை என்னவெல்லாம் செய்வார்கள்' என்றொரு வார்த்தை வேதாகமத்தில் உள்ளது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின் விசாரணைகளையும், அதில் வெளிவரவுள்ள தீர்ப்புகளையும் சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கவேண்டும். இதுவரை முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் சந்தேகங்களின் அடிப்படையில் இந்த விசாரணைகள் நகருமானால், அது சொல்லப்போகும் செய்தி பாரதூரமானது. ஓர் அரசியல் இலாபத்துக்காக சிங்கள மக்களுக்கே இந்நிலை என்றால், தமிழ் மக்களை என்னவெல்லாம் செய்திருப்பார்கள்? இந்தப் புரிதலை சர்வதேசமும், சக சிங்கள மக்களும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, தன் கடமையைச் செவ்வனே ஆற்றிவருகின்றது. எதிர்க்கட்சி என்பதற்காக இந்த விசாரணை முன்னெடுப்புகளை அவர்கள் விமர்சிக்கவில்லை. பரஸ்பர புரிதலின் அடிப்படையிலான ஓர் அணுகுமுறையை அவர்கள் பின்பற்றுகின்றனர். அதற்காக, சஜித் தரப்பை எத்தனை பாராட்டினாலும் தகும்.

## ஜனாதிபதியின் உரையை விமர்சிக்க அருகதையில்லை

### அமைச்சர் பிமல் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 20

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உரையை விமர்சிக்கத் தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழ்க் கட்சியினருக்கு எந்த அருகதையும் கிடையாது என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வடக்கில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் ஆற்றிய உரைகளைத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

வடக்குக்குச் சென்ற ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதை நோக்கமாகக் கொண்டே உரையாற்றியுள்ளார்.

அவரின் உரை தமிழ்க் கட்சியினருக்குத் தேர்தல் தோல்விப் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனால் அவர்கள் உளறுகின்றார்கள். தமிழ் மக்களின் எமக்கான ஆதரவை தமிழ்க் கட்சியினரால் தடுத்துநிறுத்த முடியாது.

இனவாதத்தையும் மதவாதத்தையும் வைத்துத்தான் வடக்கிலும், தெற்கிலும் கடந்தகாலங்களில் அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கு முடிவுகட்டப்படும்- என்றார். (ச-இ)

## காதல் தகராறு பெண் கொலை



கொழும்பு, ஏப். 20

களுத்துறை மத்துகமப் பகுதியில் இளம் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார் என மத்துகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் கொலைச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. கொலைசெய்யப்பட்டவர் 33 வயதுடைய பெண் என்றும் காதல் உறவால் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## 45 செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும்

கொழும்பு, ஏப். 20

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை 39 முதல் 45 செல்சியஸ் வரை கவனம்செலுத்த வேண்டிய மட்டத்தில் இருக்கும் என வளிமண்டலவியல் திணைகளம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளிலும், இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் இவ்வாறு வெப்பம் உயர்ந்து காணப்படும்.

அதேவேளை சப்ரகமுவ, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலனறுவை, அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## குஷ் போதையுடன் பெண்கள் கைது



கொழும்பு, ஏப். 20

கட்டுநாயக்க விமான நிலையத்தில் குஷ் ரக போதைப்பொருளுடன் பெண்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து வந்த விமானத்தில் குறித்த பெண்கள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர். அவர்களை சோதனையிட்டபோது 5 கிலோ 248 கிராம் குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-



## மேலதிக பயிர்களுக்கு ரூ. 15,000 மானியம்

கொழும்பு, ஏப். 20

எதிர்வரும் சிறுபோகத்திற்காக நெல் வயல்களில் வளர்க்கப்படும் மேலதிக பயிர்களுக்கு 15 ஆயிரம் ரூபா மானியம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தலவாக்கலைப் பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றியபோது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில் 11 . 04 . 1977

இறப்பு 12 . 04 . 2025



## கனகலிங்கம் சாந்தகுமார்

தாயகத்தில் ஓட்டுமடம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் சாந்தகுமார் அவர்கள் 12.04.2025 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம்- சரஸ்வதி தம்பதிகளின் இளைய மகனும் சதீஸ்குமார் (சுவிஸ்), சசிகலா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயராணி (சுவிஸ்), லட்சுமி காந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்- யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் அபூர்ணிகா வின் அன்புச் சிறிய தந்தையும் லோசிகன், கிருதிகா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 1.30 மணிவரை நடைபெற்று அவரது பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம். நடைபெறும் இடம் 8911, Woodbine aveue, Markham, Ont L3R5GI Canada orangis

தகவல் : குடும்பத்தினர்
077 6320462
0041763240059 (சதீஸ்)
+1 (437)220 -2399 (ஞானம்)

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1950

மறைவு 19 . 04 . 2025



## விக்கினேசு சறோஜினிதேவி

யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொட்டடியினைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேசு சறோஜினிதேவி நேற்று (19.04.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானகிருஷ்ணபிள்ளை (மாயவர்) - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விக்கினேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் கணேசநாதன் (ஜேர்மனி), மோகனாதேவி (லண்டன்), குணபாலதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற சசீந்திரா தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுதர்சினி (சுவிஸ்), காலஞ் சென்ற கமலகாசன் மற்றும் நந்தலோஜினி (நோர்வே)ஆகியோரின் அன்புத் தாயாரும், ரூபகுமார் (சுவிஸ்), விசாகினி (பிரான்ஸ்), சரண் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கமலாதேவி, பத்மாதேவி (கனடா), இரத்தினவேல் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், துவாரகன், சங்கரன், தாட்சாயினி (சுவிஸ்), கிசோத், கஜானி (பிரான்ஸ்), சாரங்கன், ஹரிகரன், பார்த்தன் (நோர்வே) பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 468 7789, 077 134 5556

23, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(CS/58024) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 03 . 1969

மறைவு 17 . 04 . 2025



## திருமதி பெலிண்டா ஆனந்தி செல்வநாயனம்

ஊர்காவற்றதுறையை பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.பெலின்டா ஆனந்தி செல்வநாயகம் அவர்கள் கடந்த 17.04.2025 வியாழக்கிழமை காலமானார்

அன்னார் இரத்தினசிங்கம் - எட்வீசம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும், செல்வி.நிலுக்சியின் பாசமிகு தாயாரும், திருமதி.றதினி டெனிஸ்கிளஸ்டன், திரு.அன்ரனி றமேஸ், திருமதி.சிபெற்றா யோகராசா அவர்களின் பாசமுள்ள சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.04.2025) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் தோவசபை (Assemblys of god) திருச்சபை, சுதுமலைச்சந்தி, மானிப்பாய் இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
இயேசு ஜீவிக்கிறார் சர்லதேச ஊழியம்,
மருதனார்மடம், சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.

(CS/2989) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 08 . 1948

மறைவு 19 . 04 . 2025



## தம்பிப்பிள்ளை இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர், நல்லூர் பிரதேச செயலகம் மற்றும் முன்னாள் யாழ் போதனா வைத்தியசாலை பரிசாரகர்)

ஸ்ரீலங்கா வீதி, உடுவில், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் நேற்று (19.04.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்புப் புத்திரனும், காலஞ்சென்றவர்களான நன்னியர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அம்பிகாதேவியின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், பனை, தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் சுன்னாகம்), பாசமிகு கணவரும், யாழினி (பிரான்ஸ்), ஜயப்பிரியா (ஆசிரியர் - யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை), கமலவேணி (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அபராஜிதன், றொஜஸ்மெல், நிமல் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சபீனா, சந்தோஸ், சாரா, சலீனா, ஸியாரா, ஹர்சனா, நிலக்சனா, ஆகாஷ், அபினேஸ், சஞ்சீவ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான தேவராஜன், செல்வராஜா மற்றும் தங்கராஜா, அருந்தவமலர், வசந்தராஜா ஆகியோரன் அன்புச் சகோதரனும், இன்பஜோதி, இரத்தினேஸ்வரி, கிருஷ்விஞானரஞ்சினி, காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், உஷாராணி மற்றும் யாழினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 500 9806

[illegible]
[illegible] சுன்னாகம்.

(CS/2992) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜனாதிபதியின் தேர்தல் விதிமீறல் ஆராயக் கூடுகிறது ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 20
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மன்னார் மாவட்டப் பிரதேசத்தில் வெளியிட்ட கருத்தொன்று தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு நாளை கூடவுள்ளது.

ஜனாதிபதி மன்னார் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு, தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விசேடமாக நிதியொதுக்கீடு செய்வது குறித்து வெளியிட்ட கருத்துத் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காகவே ஆணைக்குழு நாளை கூடவுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



### ஆசிய தடகளப் போட்டி

# பதக்கங்களை குவித்த இலங்கை

கொழும்பு, ஏப். 20
சவுதி அரேபியாவில் நடைபெற்றுவரும் 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆறாவது ஆசியத் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கை பல பதக்கங்களை வென்றுள்ளது.

இதன்படி, மகளிருக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த தருஷி அபிஷேகா தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

மேலும் ஆடவருக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கையைச் சேர்ந்த சவிந்து அவிஷ்க வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

அத்துடன் முப்பாய்ச்சல் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த தில்கி நெஹாரா வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். ஆடவருக்கான உயரம் பாய்தல் போட்டியில் நெத்யா சம்பத் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். (ச-இ)

# 100 பாடசாலைகளை மூடுவதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஏப். 20
மாணவர் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ள 100 சிறிய பாடசாலைகளை மூடுவதில் அரசாங்கம் கவனஞ் செலுத்திவருகிறது.

பத்துக்கும் குறைவான மாணவர்களைக்கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை இப்போது 500ஐ தாண்டிவிட்டது. அவற்றில், அதிக எண்ணிக்கையிலான பாடசாலைகளில் இரண்டு அல்லது மூன்று மாணவர்கள் மட்டுமே உள்ளனர். இவ்வாறான பாடசாலைகளை மூடி, அந்த மாணவர்களை வசதிகள் உள்ள பாடசாலைகளில் சேர்ப்பதற்கான முறையான திட்டத்தைத் தொடங்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலுள்ள பல சிறிய பாடசாலைகள் மூடப்பட்டு, அவற்றின் மாணவர்கள் தற்போது வேறு பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். மூன்று கிலோமீற்றருக்குள் ஒரு பாடசாலை என்ற கருத்தை மனதில் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. (ச-இ)



# தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 20
மனம்பிட்டிப் பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தேவாலயமொன்றில் ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தித் தப்பிச்சென்ற நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. தேவாலயத்தின் ஜன்னல் ஒன்றே சேதமடைந்துள்ளது என்றும் இந்த ஆலயத்தின் போதகருக்கு இடையேயான தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# விபத்துகள்; 713 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 20
2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற 685 வீதிவிபத்துகளில் 713 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதிக்குள் இடம்பெற்ற வீதிவிபத்துகளில் 744 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு வீதி விபத்துகளினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் 28ஆகக் குறைந்துள்ளன. 2024 ஆம் ஆண்டில் சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் இடம்பெற்ற 103 வீதிவிபத்துகளில் 105 பேர் உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிள் விபத்துகளாலேயே இளைஞர்கள் அதிக அளவில் உயிரிழக்கின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கிளிநொச்சியில் புத்தாண்டு விழா



கிளிநொச்சி, ஏப். 20
இலங்கைப் பாதுகாப்புப் படைப்பிரிவின் 55 ஆவது காலாட் படையணியின் ஏற்பாட்டில், சித்திரைப் புத்தாண்டு விழா கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுச்சனிக்கிழமை இடம்பெற்றது. விழாவில் விருந்தினர்களாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம் படை முகாம்களின் கட்டளைத் தளபதி மேஜர் ஜென்ரல் மானத யாம் பத் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலக மேலதிக செயலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.
ஆரம்ப நிகழ்வாக ஆண், பெண் இருபாலாருக் குமான துவிச்சக்கரவண்டி ஓட்டம் மற்றும் மரத னோட்டப் போட்டிகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து வழுக்கு மரம் ஏறுதல், தலைய ணைச் சண்டை முதலான பல பாரம்பரிய விளையாட்டுகளும் சிறுவர்களுக் கான விளை யாட்டுகளும் நடைபெற்றன. அன்றையதினம் இரவு 'அக்னி' இசைக்குழுவின் இன்னிசை நிகழ்வும்இடம்பெற்றன. (ச-25, 214, 113)

# சுற்றாடல் சூழல் கருத்தரங்கு

மன்னார், ஏப். 20
மன்னார் கமநல சேவைகள் திணைக்களம் மற் றும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் மன்னார் குளங்களின் கீழான சுற்றாடல் சூழல் சம்பந்தமான கருத்தரங்கு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
கருத்தரங்கில் வளவாளராக மன்னார் கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் கலிஸ்ரஸ், தோட்டவெளி கமநல சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோ கத்தர் மிராண்டா மற்றும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்க அலுவலகர் சின்கிலேயர் பீற்றர் ஆகியோர் கலந்துகொண்டனர்.
இதன்போது, கமநல சேவைத் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டுவரும் குளங்கள் தொடர்பிலும் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் மற் றும் யு.என்.டீ.பீ ஆகிய நிறுவனங்களால் முன்னெ டுக்கப்பட்டுவரும் சுற்றாடல் சம்பந்தமான வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையா டப்பட்டன. (ச-25,60)






# தியாகதீபம் அன்னை பூபதிக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

கிளிநொச்சி, ஏப். 20
நாட்டுப் பற்றாளர் அன்னை பூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நேற்றுச் சனிக்கிழமை மாவட்டக் கிளைப் பணிமனையில் உணர் வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.
நிகழ்வில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் அருள்செல்வி கனகராசா நினைவுச்சுடர் ஏற்றிவைத்தார். அகவணக்கம், மலர்மாலை அணிவித்தல், மலரஞ்சலி என்பவற்றைத் தொடர்ந்து நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சிப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், போராளிகள் நலன்புரிச்சங்க உறுப்பினர் செல்வரட்ணம் தனுபன் ஆகியோர் கலந்துகொண்டு நினைவு ரைகள் ஆற்றினர். (ச-66)



இயக்கச்சி திரியாய் ஸ்ரீ பார்வதவர்த்தினி அம்பாள் ஆலய கும்பாபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற் றது. (ச-25)

# கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம், ஏப். 20
சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலை யத்தின் மாணவர்கள் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டத்துக்கு சுற்றுலா மேற்கொண்டனர்.
மன்னார் மாவட்டத்தின் ஆன்மீக, வரலாற்றுப் பிர சித்தி பெற்ற சுற்றுலாத்தலங்களுக்கு சுற்றுலாவை மேற்கொண்ட மாணவர்கள் குறித்த தலங்களின் முக்கியத்துவம் குறித்து அறிந்துகொண்டனர்.
இதன்போது ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்
# குடும்பமொன்றுக்கு சராசரி மாதம் ஒரு இலட்சம் தேவை

**கொழும்பு, ஏப். 20**

**இலங்கையின் குடும்பம் ஒன்றின் உணவு மற்றும் பிற தேவைகளை நிறைவுசெய்ய மாதமொன்றுக்கு சராசரி ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் தேவைப்படுவதாக உலக உணவுத்திட்டத்தினால் அண்மையில் வெளியிடப் பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



இதன்படி, ஒரு குடும்பத்தின் உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஒரு குடும்பத்துக்கு 47ஆயிரத்து 107.55 ரூபா தேவைப்படும்.

அத்துடன், உணவு அல்லாத பிற செல வுகளுக்காக ஒரு குடும்பம் 57ஆயி ரத்து 507.67 ரூபாவை சராசரியாக உழைக்கவேண்டும்.

குறித்த செலவுகளைக் கடந்த ஆண் டுடன் ஒப்பிடும்போது, மாதாந்த சரா சரி உணவுச்செலவு நிலையானதாக இருப்பதாகவும், மாதாந்த சராசரி உணவு அல்லாத செலவு மாற்றங்க ளுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. எனினும் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகை யில், இந்த ஆண்டு பெப்ரவரி மாதத் தில் உணவு அல்லாத மாதாந்த சரா சரி செலவினம் 6 வீதத்தால் குறைவ டைந்துள்ளது என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)


# மணல் கடத்திய டிப்பர்கள் பறிமுதல்

கிளிநொச்சி, ஏப். 20

கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்து அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி மணல் ஏற்றிவந்த 4 டிப்பர்கள் கைப்பற் றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஏ-9 பிரதான வீதியில் நேற்று சனிக்கி ழமை வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சாவகச்சேரிப் பொலிஸா ரால் இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப் பட்டுள்ளது. (ச-25, 28)

# வீழ்ச்சியடையும் தேங்காய் நுகர்வு




கொழும்பு, ஏப். 20

நாட்டில் தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்ட சரிவு மற்றும் தேங்காய் விலைகளில் ஏற்பட்ட அதி கரிப்புக் காரணமாக தினசரி தேங்காய் நுகர்வு குறைவடைந்துவருவதாக அரச புள்ளிவிவ ரங்கள் தெரிவிக்கின்றன.

உரப்பற்றாக்குறை, வெள்ளை ஈ, கடந்த ஆண்டு பெய்த கனமழையால் மகரந்தச் சேர்க்கைப் பிரச்சினைகள் மற்றும் காட்டு விலங்குகளிடமிருந்து அதிகரித்த சேதம் உள் ளிட்ட பல காரணங்களால் தேங்காய் உற்பத்தி குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அதேவேளை நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 3,000 மில்லியன் தேங்காய்கள் தேவைப்ப டும் நிலையில் தேங்காய்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, 200 மில்லியன் தேங்காய்களுக்குச் சமமான தேங்காய்ப் பால், தேங்காய்த் துருவல் ஆகியவற்றை மறு ஏற்று மதிக்காக மூன்று பிரிவுகளின் கீழ் இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளது. கடந்த 2024ஆம் ஆண்டு ஒரு தேங்காய் 120 ரூபாவுக்கு விற் பனை செய்யப்பட்டதுடன், தற்போது ஒரு தேங் காயின் விலை 220 ரூபாவாக அதிகரித்துள் ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# பிரதான பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சி
## மத்திய வங்கி தகவல்

கொழும்பு, ஏப். 20

நாட்டின் பிரதான பயிர்களான தேயிலை, தேங்காய் மற்றும் இறப்பர் ஆகியவற்றின் உற்பத்தி இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் குறைந்துள்ளது.

வறட்சியான வானிலை காரணமாக பெப்ரவரி மாதத்தில் தேயிலை உற்பத்தி 15.6 மில்லியன் கிலோவாகக் குறைந்துள் ளது.

அதேபோல், இறப்பர் உற்பத்தியும் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு பெப்ரவரியில் 5.03 மில்லியன் கிலோகிராமாகக் குறைந்துள்ளது.

அத்துடன், பெப்ரவரி மாதத்தில் தேங்காய் உற்பத்தி 178.01 மில்லியனாகக் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட் டத்தில் நாட்டின் தேங்காய் உற்பத்தி 260.5 மில்லியனாகக் காணப்பட்டது என்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)




# 'பாட்டி சொன்ன கதைகள்' சிறுவர் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 20

வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் 'பாட்டி சொன்ன கதைகள்' சிறுவர் நூல் வெளி யீட்டு நிகழ்வு, சுழிபுரத்தில் அமைந்துள்ள கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்புவிடுத்துள்ளனர். (ச-25)




# திருமணமான 9 நாள்களில் விபத்தில் பலியான மணமகன்
## மட்டக்களப்பில் சோகம்

மட்டக்களப்பு, ஏப். 20

மட்டக்களப்பில் இடம்பெற்ற கோரவிபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சந்திவெளியைச் சேர்ந்த வடிவேல் மோகனசாந் தன் (வயது-27)என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மற்றுமொருவர் படுகாயம் அடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்தில் உயிரிழந்த இளைஞன் 9 நாள் களுக்கு முன்னரே திருமணப் பந்தத்தில் இணைந்துகொண்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# கதிர்காமம் ஆடிவேல் திருவிழா ஜூன் 26 இல் கொடியேற்றம்!

கொழும்பு, ஏப். 20

கதிர்காமம் ஆடிவேல் திருவிழா ஜூன் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை 10ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெ றவுள்ளது. கதிர்காமத்திற்கான பாதயாத்திரை யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆல யத்திலிருந்து எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செக்கச்சிவந்த இரத்தம்' திருப்பாடுகளின் காட்சி யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று


**வீடு வாடகைக்கு**

யாழ் இந்து ஆரம்பபாடசாலை அருகாமையில் சிறிய குடும்பம் / பெண் பிள்ளைகளுக்கான (Anex) வீடு வாடகைக்கு உண்டு.

074 038 6655


யாழ்ப்பாணம், ஏப். 20

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தயாரித்து வழங்கும் 'செக்கச் சிவந்த இரத்தம்' எனும் சடங்கு நிலை ஆற்றுகை நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள திறந்தவெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவர்களால் திருப்பாடுகளின் காட்சி பல்வேறு தலைப்புகளின்கீழ் ஆற்றுகைசெய்பட்டுவந்தது. கடந்த 2019 ஆம் ஆண்டு ஏற்பட்ட குண்டுவெடிப்பு,கொரோனா ஆகிய காரணங்களின் நிமித்தம் ஆற்றுகை இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் மீண்டும் ஏழு வருடங்களின் பின்னர் 'செக்கச்சிவந்த இரத்தம்' எனும் தலைப்பில் நாடகத் துறை ஆசிரியரும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிரதி அதிபரும் நெறியாளருமான ஏ.சி . பிரான்சிஸ் நெறியாள்கையில் இந்த ஆற்றுகை அரங்கேற்றப்படவுள்ளது. (ச-125)

## கண்ணீர் காணிக்கை



யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய ஸ்தாபகர்கள் பரம்பரையைச் சேர்ந்த ஓய்வுநிலை பேராசானும் கல்வயலூர் ஆங்கிலபாட விருத்தியில் பெரும்பங்காற்றியவருமாகிய

**அமரர் பத்மநாதன் ராஜலக்ஸ்மி**
(ராசக்கா ரீச்சர்)

அவர்கள் 16.04.2025 அன்று கொழும்பில் காலமானார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(இறுதிக் கிரியைகள் 20.04.2025 ஞாயிறு அன்று காலை 9.30 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இடம்பெறும்)

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

யா/ கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய விழுதுகளும்
கல்வயல் வாழ்மக்களும்

## மாமனிதர் சிவநேசன் நினைவுப்பேருரை

யாழ்ப்பாணம், ஏப். 20

சிறீலங்கா அரசினால் படுகொலைசெய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தமிழீழத் தேசியத் தலைவரால் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவமளிக்கப்பட்டவருமான மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 17 ஆவது ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்டு நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (ச-66)

## காலாட்படையின் புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 20

51ஆவது காலாட் படைகளால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள தமிழ் - சிங்களப் புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகள் எதிர்வரும் 6 ஆம் திகதி மு.ப.8 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், தலையணைச் சண்டை, சறுக்குமரம் ஏறுதல், முட்டி உடைத்தல், அழகுராணிப்போட்டி, கயிறு இழுத்தல், ஓலை பின்னுதல், கோலம்போடுதல், வினோத உடைப்போட்டி உள்ளிட்ட விளையாட்டுகள் இடம்பெறவுள்ளன. வெற்றியாளர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
04 • 04 • 1944



மறைவு
19 • 03 • 2025

கடந்த 19.03.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

**அமரர் தங்கராசா இலட்சுமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 18.04.2025 வெள்ளிக் கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
குருபரன் - 077 923 1602
தயாபரன் - 077 018 9243

அண்ணாமலை வீதி,
சுதுமலை.

(CS/2956) J-1

## மரண அறிவித்தல்

பிறப்பு
19 • 08 • 1954



இறப்பு
18 • 04 • 2025

**திருமதி அன்னலட்சுமி ஜெயக்குமார்**

காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி ஜெயக்குமார் அவர்கள் 18.04.2025 இல் காலமானார்.

அன்னார் ஓவசியர் முத்துக்குமாரு தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் ஜெயக்குமார் அவர்களின் பாசமிகு மனைவியும் கவிதா, ஜெயந்தன் (London), சுரேந்திரன் (London), நிமலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னமணி, மகாலட்சுமி ஆகியோரின் பாசமி சகோதரியும் ஜெயசீலன் (ஜெயலங்கா என்டபிரசைஸ் - முருங்கன்), காஞ்சனா (London), தர்மினி (London), ஆகியோரின் அன்பு மாமியும் பேபிகா, கீர்த்தனா, லக்சிகன் ஆகியோரின் உயிரான அம்மம்மாவும் அனயா, ஆதனா, ஆதிரன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
கவிதா (மகள்) 076 5677938
ஜெயசீலன் (மருமகன்) 076 6389989

சிவன் கோவிலடி,
சித்தன்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம், சியம்பலாவ பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை நடந்துள்ளது. 44 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். இவர் அதிகாலை வீட்டிலிருந்து வெளியே சென்ற போது வீட்டுக்கு முன்பாக நின்றிருந்த காட்டு யானை தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. யானையின் தாக்குதலில் உயிரிழந்தவரின் உடல் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## வேலையாட்கள் தேவை

ஆனைக்கோட்டையில் புதிதாக திறக்கப்பட்ட அசைவ உணவகத்திற்கு சமையலாளர், ரொட்டி ரைஸ் மேக்கர், சப்ளேயர் மற்றும் ஏனைய வேலைகளுக்கு ஆட்கள் தேவை. ஆண்,பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.

077 055 6949 , 075 238 7405



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)
தொடர்புகளுக்கு :- 077 281 1234
(CS/58018) J-1


## மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்கம்
## 17 வது வருடாந்த பொதுக்கூட்ட திகதி மாற்றம்

மாற்றுத் திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்கத்தின் 17 வது வருடாந்த பொதுக்கூட்டம் 26.04.2025 சனிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப் பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

சிரமத்திற்கு வருந்துகின்றோம்.
திருமதி. சுஜீவா சிவதாஸ்
செயலாளர்

## நோர்தேன் இண்டஸ்ட்ரீஸ் (பி) லிமிட்டெட்

69, பிறவுண் வீதி, கொக்குவில்.



தரமான elgee மற்றும் MRF (treads) அச்சுக்களை பயன்படுத்தி டயர் மீள் நிரப்பும் சேவையை சிறப்பாக வழங்கி வருகிறோம். மேலும் எம்மிடம் துரித டயர் மீள்நிரப்பும் சேவைகளையும் பற்றுக்கொள்ளலாம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியோடு அறிய தருகின்றோம்.

நோர்தேன் இண்டஸ்ட்ரீஸ் (பி) லிமிட்டெட்
69, பிறவுண் வீதி, கொக்குவில்.


தொடர்புகளுக்கு:
021 222 1735, +94 70 714 8691

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் , சுழிபுரம் , மூளாய் முருகன் பிள்ளையார் கோவிலடி வீதியில் இருந்து டச்சு வீதியில் இருந்து 100 அ தூரத்தில், சுற்று மதிலுடன் 10 பரப்பு காணியில், 4 அறைகள் 2 குளியல் அறைகளுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. விலை பேசி தீர்மானிக்கலாம், உரிமையாளர் வெளிநாட்டில் இருந்து வந்து நிற்பதால் உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- 077 237 8718

## கண்ணீர் அஞ்சலி



சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முன்னாள் தலைவராக கடமையாற்றிய
**சட்டத்தரணி V.T. சிவலிங்கம்**
அவர்களின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

பணப்பாளர் சபை உறுப்பினர்கள்,
இல்ல முகாமைத்துவச் சபையினர்,
இல்லப் பிள்ளைகள், பணியாளர்கள்.

## காணி விற்பனைக்கு

சரசாலை தெற்கு (கனகன்புளியடி சந்திக்கு அண்மையில்) 11 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு.

வாஹினி ஸ்ரீதரன் 077 828 1135

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 3/4 Km தூரத்தில் பரப்பு 25 இலட்சம். 5+3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

077 446 0241

## வீடு விற்பனைக்கு

கொழும்பு, மொரட்டுவ பகுதியில் இருக்கும் சொய்சாபுர தொடர் அடுக்குமாடியில் **C Block** ல் இரண்டு அறையுடன் கூடிய வீடு விற்பனைக்கு உள்ளது. மாபிள் பதித்து முழு வீடும் திருத்தப்பட்டுள்ளது.

விலை - 15,000,000/=

தொடர்புகட்கு
+94762306450
Email : mpact.uk@gmail.com

## காணி விற்பனைக்கு

கோண்டாவில்
பழனியாண்டவர் வீதியில்
3 பரப்புக்காணி
விற்பனைக்கு உண்டு.

077 843 5356
whatsapp:- 077 296 1063

## காணி விற்பனைக்கு

தீவுப் பகுதியைச் (அல்லைப்பிட்டி) சேர்ந்த

1. வடலித்தோட்டம் (கவறங்வளவு) பெயருள்ள காணி நிலப்பரப்பு 11 ½ பரப்பு
2. "நரியன் வயலும்", "நரியன் வளவும்" என்ற பெயருள்ள, நெற்பரப்பு 97 பரப்பு, பரப்பு 10 உம், 1 ½ குழியும் உள்ள நெற்காணி
3. நரியன் வயல் பெயருள்ள காணி நிலப்பரப்பு 5 5/8

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
077 301 3652
077 191 9985
011 255 5571

## பணிப்பெண் தேவை

கொழும்பில் தமிழ் குடும்பத்துடன் தங்கி நின்று பணிபுரிய பண்பான பணிப்பெண் தேவை.

077 858 1486
(CS/58011) J-1

## காணி விற்பனைக்கு

மிருசுவில் மற்றும் அல்லாரை தெற்கில் மிருசுவில் A9 வீதிக்கு அருகாமையில் 5பரப்பும் கச்சாய் வீதி அல்லாரை தெற்கில் 2.5 பரப்பும் காணிகள் விற்பனைக்கு உண்டு.வாங்க ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(CR/0067) S-1

whatsapp/ Viber 0033 770 012099

## உடனடி வேலைவாய்ப்பு

Tamil Customer Care Executive.
எழுத்து தமிழில் உரையாடும் திறன் அல்லது யாழ்ப்பாண / மட்டக்களப்பு தமிழ் பேச்சு வழக்கு அவசியம்.
வயது எல்லை 18-35.
Email CV To : hr.eqsolutions@outlook.com
with subject "Job Code:690 – Tamil Customer Care Executive"

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

077 334 1281

## வீடு வாடகைக்கு

இல. 138, ஆடியபாதம் வீதி, கேணியடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
3 அறைகள், இணைந்த குளியலறை உடன் கூடிய வீடு வாடகைக்கு.
மாதவாடகை - 50,000/-
முற்பணம் - 600,000/-

077 237 4439

## மணமகள் தேவை

யாழ் , காரைநகர் இந்து (V) 1989 இல் பிறந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

077 296 4560

## வீடு வாடகைக்கு

யாழ்.பிறவுண் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய மேல் வீடு வாடகைக்கு உண்டு.

077 7232535

## பணியாளர் தேவை

பில் கிளாக்/காசாளர்/வயரிங்/வெல்டிங் வேலை / கல்/ தூண்/ பூச்சாடி, ஓட்டைக்கல் அரிபவர்கள் தேவை.

077 4573580

## தேவை

கருவாட்டிற்கு தேவைக்குரிய உப்பு வேண்டிய அளவில் அரைத்துக் கொடுக்கப்படும்

தொடர்பு: 076 2977078

## காணி விற்பனைக்கு

உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் வீதி, தொந்தியா வேட்டையில் பயன்தரும் தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்கு உண்டு.
(CR/0066) J-1

076 072 0341

## THE ROYAL COLLEGE OF JAFFNA


தனியார் கல்வி நிறுவனம். சங்கானை. 3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாக கதைக்கப் பயில
By: ந. விக்னேஸ்வரன் ஆச்சார்யார் (அரச ஓய்வூதியர் M.L.T (M.L.S) 27 வருட அனுபவம்.
குபேரன் கட்டடம், சங்கானை.

Tel: 077 675 1649

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில்...

33ஆம் ஆண்டு நினைவலைகள் | 3ஆம் ஆண்டு நினைவலைகள்





## அம்பலவாணர் அமிர்தலிங்கம்

தோற்றம் 14.07.1919 | மறைவு 10.11.1992

## திருமதி தங்கம்மா அமிர்தலிங்கம்

தோற்றம் 27.04.1932 | மறைவு 22.04.2022

எம் ஆருயிர் குல தெய்வங்களே எம்மை
ஆறாத்துயரில் விட்டு எங்கு சென்றீர்கள்? ஐயா
நீங்கள் சென்று முப்பத்து மூன்று ஆண்டுகள்
ஓடி மறைந்தனவே. அன்றிலிருந்து அனைத்து
இன்ப துன்பங்களையும் அம்மா ஏற்று
எங்களை வழிநடத்தினீர்களே இன்று நீங்கள்
சென்று மூன்று ஆண்டுகள் ஓடி ஒழிந்ததுவே
எங்களின் இதயங்கள் உங்கள் இருவரையும்
என்றும் நினைக்கத் தவறுவதே இல்லை
ஆத்ம சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

*CR/44802) J-1

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 03 . 1953



மறைவு 18 . 04 . 2025

## அமரர் சொக்கலிங்கம் தவராசா

(ஓய்வுபெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர் RDD)
Retired Executive Engineer at Road Development Department
New Way Marketing (Pvt) Ltd. நிறுவுநர்

ஐயனார்கலட்டி, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அமரர் சொக்கலிங்கம் தவராசா அவர்கள் நேற்று முன்தினம் (18.04.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேல் சொக்கலிங்கம் மற்றும் சொக்கலிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற துரைராஜா - மீனாட்சிசுந்தரம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், ராஜினி அவர்களின் அன்புக் கணவரும், ரஜீஷன், தனஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதினி, குமுதினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கேசகி, பிருந்தன், ஆரதி, தீரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜெயராசா காலஞ்சென்ற விஜயராசா, நமணி, வளர்மதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயலக்சுமி, வேணி, சிவராஜா, புஸ்பராஜா, சரோஜினி, இராசநாதன், இன்பராணி, கிருஸ்ணசாமி, தேவராணி, சற்குணராஜா, ராஜகுமார் மற்றும் அபர்ணா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
076 660 8384

(CR/0077) J-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 30 . 03 . 1965



மறைவு 24 . 03 . 2025

கடந்த 24.03.2025 புதன்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

## அமரர் பத்மராஜா காஞ்சனமாலை(காஞ்சனா)


அவர்களின் அந்தியேட்டிக் கிரியை நிகழ்வுகள் நாளை (21.04.2025) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் (23.04.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.41 கேசவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம் .

குடும்பத்தினர்
077 741 7133

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1944



மறைவு 19 . 04 . 2025

## வேலாயுதம் இராசையா

நவாலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் இராசையா அவர்கள் நேற்று (19.04.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தவபாக்கியம், பாக்கியம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும், சியாமளா, கிருசாந்தி, கிருஷா, கிருஸ்ணவேணி (V.T.C ஆசிரியர்), ஷசிகுமார் (ஆசிரியர் - யா/ நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் தந்தையும், சிவனேசராசா, குகேந்திரன், தங்கத்துரை, மணிவண்ணன், தர்மினி ஆகியோரின் மாமனாரும், கோமதி, கஜந்தன், சதீஸ், ரஜதா, கஜரூபன், அனந்தன், சுதர்சினி, கௌதம், கோபிநாத், நிரூபன், சாம்பவி, ராகவன், அட்ஷயா, அட்ஜந் ஆகியோரின் பேரனும், கேஷாயினி, தருண், றித்திக்கா, லோஹிதன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முருகமூர்த்தி கோயில் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்
077 925 8620

(CR/0076) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின்வரிவிதிப்பு; 15நாடுகளுடன்கலந்துரையாடல்

## ட்ரம்ப்தீர்மானம்

வரி திருத்தம் தொடர்பில் ஜப்பான், ஐரோப்பியஒன்றியம், தென்கொரியா, இந்தியா உள்ளிட்ட 15 நாடுகளுடன் கலந்துரையாடுவதற்கு அமெரிக்க ஜனாதிபதிடொனால்ட்ட்ரம்ப்தீர்மானித்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்துடனானவர்த்தகஒப்பந்தம்100சதவீதம் சாத்தியமாகும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இத்தாலியப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனியுடனான சந்திப்பைத் தொடர்ந்து டொனால்ட் ட்ரம்ப் இதனைக்குறிப்பிட்டுள்ளார். அதேவேளை ஐரோப்பியஒன்றியஇறக்குமதிகள்மீது ஆரம்பத்தில் 20 சதவீத வரி விதித்து பின்னர் 90 நாள்களுக்கு அதைத் தாற்காலிகமாக ட்ரம்ப்நிறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### ஈஸ்டர்...

உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்குப் பொறுப்புக்கூறவேண்டிய குழுவின் பெயர் விபரம், ஏப்ரல் 20ஆம் திகதிக்கு முன்னர் பகிரங்கப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கடந்த 30ஆம் திகதி அறிவித்திருந்தார். எனவே, உயிர்த்தஞாயிறுக்கு முன்னதாக (பெரும்பாலும் இன்று) மேற்படி தகவல்களை ஜனாதிபதி வெளியிடுவார் என முழுநாடும் எதிர்பார்த்துக் காத்திருந்தது. இவ்வாறான நிலையிலேயே, உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விடயங்களை வெளியிட சிலகாலம் தாமதமாகும் என்ற தொனிப்பட ஜனாதிபதி உரையாற்றியுள்ளார்.

பதுளையில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

முழுநாடும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சம்பவம் (உயிர்த்த ஞாயிறு தாக்குதல்) தொடர்பான விசாரணை வெற்றிகரமாக இடம்பெற்றுவருகின்றது. விசாரணையின் அடுத்தகட்டத்தை மிகவும் அவதானத்துடனும், சூட்சுமமாகவும் முன்னெடுக்கவேண்டியுள்ளது. எனவே, சில விடயங்களை உங்களால் தற்போதே அறிந்துகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விசாரணைகள் சிறப்பாக இடம்பெறுகின்றன என்ற உத்தரவாதத்தை என்னால் வழங்கமுடியும். இதுவரை வாய்திறக்காதவர்கள்கூட தற்போது வாய்திறக்க ஆரம்பித்துள்ளனர். சாட்சியங்களைப் பதிவுசெய்வதற்கு அச்சப்பட்டவர்கள், சாட்சியங்களை வழங்கிவருகின்றனர்.

தொடர்பு இல்லை எனக் கூறியவர்களின் தொடர்புகள் வெளிவந்த வண்ணமுள்ளன. எனவே, விசாரணை சிறப்பாக இடம்பெற்றுவருகின்றது. குற்றங்களை காலத்தால் மூடிமறைக்க இடமளிக்கமாட்டோம். உரியவகையில் நீதி நிலைநாட்டப்படும்-என்றார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் என ஜனாதிபதி வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், அதனை மையப்படுத்தியதாகவே மேற்படி கருத்துகளை வெளியிட்டுள்ளார் என்றே கருதப்படுகின்றது. (அ-ம-44)

**சமையலாள் தேவை**

யாழ். நகரில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

077 277 7779

**காணி விற்பனைக்கு**

ஆடியபாதம் வீதியில் இருந்து 100m தொலைவில் 5 1/4 பரப்பு மற்றும் 2 1/2 பரப்பு காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

077 257 5712

**புதுக்கடைத் திறப்பு விழா**

யாழ்ப்பாணத்தில்

கோழிகள், முட்டைகள் மலிவு விலையில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது நிறுவனம் அடுத்த தினம்தோறும் திறக்கப்படுகிறது.

விலை விபரம்:

| | |
|---|---|
| புறோயிலர் இறைச்சி | - 950/- |
| கல்பேட் இறைச்சி | - 950/- |
| பேரன்ஸ் இறைச்சி | - 1100/- |
| ஊர்சேவல் | - 1300/- |
| முட்டை 1 | - 25/- |

இவை அனைத்தும் எம்மிடம் எப்போதும் மலிவு விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

நியூ சிற்றி கோழிக்கடை

பொம்மைவெளி, காரைநகர் வீதி, யாழ்ப்பாணம்.

077 468 3354

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் Transport நிறுவனம் ஒன்றிற்கு பொருட்கள் ஏற்றி இறக்க கூடிய வேலையாட்கள், சாரதிகள் தேவை.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணம் இருந்து கொழும்பிற்கும் பொருட்களை ஏற்றி இறக்கும் வேலையாட்களும், வாகனங்களில் கடைகளிற்கு பொருட்களளை விநியோகிப்பதற்கு சாரதிகளும் தேவைப்படுகின்றனர்.

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதிக்கேற்ப ஊதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

21, 22, 23 ம் திகதிக்குள் தொடர்பை ஏற்படுத்தல் வேண்டும்.

உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

077 814 5466, 077 293 5168

### கிறிஸ்தவத்...

டுள்ளன. பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். பெரிய வெள்ளி வழிபாடுகளைத் தொடர்ந்தே, 24 மணிநேரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் கத்தோலிக்க ஆலயங்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### குடும்பத்தலைவர்...

தொடர்பான விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

### உள்ளூராட்சி....

தாட்சி அலுவலர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில், வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட தரப்புகளால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பிலும் கவனம்செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போதே, வழக்குகளுடன் தொடர்புடைய சபைகளுக்குத் தேர்தல் பிற்போக வாய்ப்புகள் உள்ள விடயத்தை தேர்தல் திணைக்கள அதிகாரிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

வழக்குத் தொடுநர் தரப்புக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்படும் பட்சத்தில், அது வாக்குச்சீட்டில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய நிலையையும் உருவாக்கும். இதன் காரணமாகவே, தொடர்புடைய சபைகளுக்கு தேர்தல் பிற்போகும் சந்தர்ப்பங்கள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (அ-ம-125)

### விலங்குக்...

தெரியவந்துள்ளது.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரப்பட்ட தகவலுக்கு அமையவே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

3 ஆயிரத்து 47 பேர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், அவர்களில் ஐந்து பேரே உயிரிழந்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

### வாக்காளர்கள்...

ளது.

தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறாத உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பலமுறை யோசிக்கவேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அண்மைக்காலமாக அடிக்கடி தெரிவித்துவருகின்றார்.

ஜனாதிபதியின் கருத்துகளுக்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல தரப்பினரும் கடும் எதிர்ப்பைப் பதிவுசெய்திருந்தனர். இதையடுத்தே, பவ்ரல் அமைப்பும் ஜனாதிபதியின் கருத்துகளைக் கடுமையாகக் கண்டித்துள்ளது.

நேர்மையான தேர்தல்கள் மற்றும் நடுநிலையான ஆட்சிமுறை குறித்துப் பேசியவர்களே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது கவலைக்குரிய விடயம். ஆதலால் ஜனாதிபதியின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் பவ்ரல் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

### வவுனியாவில்...

விபத்தில் வாகனம் பெரும் சேதத்துக்கு உள்ளாகியதுடன், மின்கம்பமும் தகர்ந்து வீதியில் விழுந்துள்ளது. இந்தக் கோரவிபத்தில், சாரதி உயிர் தப்பியதே பெரிய விடயமாகப் பார்க்கப்படும் நிலையில், அந்தச் சாரதி சம்பவ இடத்தில் நிற்காமல் தப்பியோடியுள்ளார்.

வவுனியா பொலிஸாரின் கட்டுப்பாட்டில் வாகனம் கொண்டுசெல்லப்பட்டுள்ளது. தப்பியோடிய சாரதியைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-110)

### 100,000...

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுற்றுலாத்துறையை மையப்படுத்திய செயற்திட்டங்களை அநுர அரசாங்கம் மேற்கொண்டுவருகின்றது. இந்த வருடத்தில் அண்ணளவாக 30 இலட்சம் சுற்றுலாவிகளை நாட்டுக்குள் வரவைப்பதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். இவ்வாறான நிலையிலேயே, இந்த மாதத்தில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை அண்ணளவாக 8 லட்சத்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாவிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியா, ரஷ்யா, பிரிட்டன், ஜேர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாவிகளே இலங்கைக்கு மிக அதிகளவில் வருகைதந்துள்ளனர். (அ-ம-இ)

### அன்னை...

திருகோணமலை மாவட்டங்கள் உள்ளிட்ட இடங்களில் அன்னை பூபதியின் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-125)

தொடர்புடைய மற்றொரு செய்தி பக்கம்: 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.04.2025 ஞாயிற்றுக்கிழமை

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57780) J-1

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

Whats app:-

+61 421 290 240

(CS/57926) J-1

## தேவை

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையினால் பராமரிக்கப்படும் தந்தை செல்வா கலையரங்கத்திற்கு வினைத்திறனுடன் வேலை செய்யக்கூடிய முன் அனுபவமுள்ள 30- 50 வயதுக்குட்பட்ட ஆண் மற்றும் பெண் பராமரிப்பு சுத்திகரிப்பாளர்கள் தேவையாகவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

EPF, ETF வழங்கப்படும்

வேலையாளர் காப்புறுதி மற்றும் தனிநபர் விபத்துக் காப்புறுதி வழங்கப்படும்

ஏனையவைகள் நேர்முகத்தேர்வில் கலந்துரையாடப்படும். உங்கள் சுயவிபரக்கோவையை 30.04.2025 இற்கு முன்னர் கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க முடியும்.

**முகாமையாளர்,**
**தந்தை செல்வா கலையரங்கம்**
**114.ராஜேந்திரப் பிரசாத் வீதி**
**(யாழ் / மத்தியகல்லூரிக்கு அருகாமை)**
**யாழ்ப்பாணம்.**
**மேலதிக தொடர்புகளுக்கு- 0770044596**

(CS/58000) J-1

## வேலையாள் தேவை

இருபாலையில் அமைந்துள்ள பிரபல எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கணக்காளர், முகாமை திறன் கொண்ட வேலையாள் தேவை கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
jaffna@lionagents.lk
077 739 1221

(CS/58020) J-1

## பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 20

சுன்னாகம் ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ்தானத்தின் பொங்கல் உற்சவம் இன்று காலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதைத் தொடர்ந்து பக்தர்களால் நேர்த்திக்காக வழங்கப்படும் ஆடு, கோழி என்பன நண்பகல் 12 மணியளவில் ஏலத்தில் விடப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## காணி விற்பனைக்கு

அறுகுவெளியில் A32 பிரதான வீதியில் இருந்து 200M தூரத்தில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

Rajeephan Shanththirasekaran
077 209 8826

## வேலையாள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் மின் உபகரணங்கள் விற்பனை நிலையத்துக்கு ஆண் வேலையாள் தேவை

076 0019836

## வேலையாட்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள மிக்சர் தொழிற்சாலை ஒன்றிக்கு பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 920 9507

## வேலையாட்கள் தேவை

நாவற்குழியில் இயங்கும் கம்பனி ஒன்றிற்கு வெல்டர் வெற்றிடம் உள்ளதால் முன்னனுபவம் உள்ளவர்கள் கீழ்காணப்படும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 068 5170, 077 639 3412

## காணி விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் ஆயாக் கடவை, பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் நல்ல செம்மண் வளம் உள்ள 9 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும், பண்ணை அமைப்பதற்கும் ஏற்றது.

தொடர்பு:- 076 419 6358

## நோயாளர் பராமரிப்பாளர் தேவை

சங்கானை பிரதேச வைத்தியசாலை நரம்பியல் புனருத்தாபன பிரிவில் நோயாளர்களை பராமரிக்க ஆண்/பெண் பராமரிப்பாளர்கள் தேவை. தகுந்த பயிற்சி , சிறந்த வருமானம் வழங்கப்படும் .

நோயாளர் நலன்புரிச் சங்கம் - சங்கானை வைத்தியசாலை

077 381 9855

## பெண் உதவியாளர் தேவை

பருத்தித்துறை புலோலி மேற்குப் பகுதியில் வயோதிபப் பெண்ணொருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க 45-55 வயதிற்குட்பட்ட நேர்மையான, வேலைகளை திறம்பட செய்யக்கூடிய பெண் உதவியாளர் தேவை. அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். நீண்ட நாட்களுக்கு நின்று வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

074 154 7811 , 077 792 1890

## கடை விற்பனைக்கு

யாழ் பகுதியில் அமைந்துள்ள கடை விற்பனைக்கு உண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:- 077 688 5392

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
நல்லூர் சங்கிலியன் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 794 8012

## Shop Assistant / Worker

தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடையொன்றில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.
சம்பளம் - 40,000/-
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.
Location- A.A.W & Sons, Hambantota

தொடர்பு:- 077 480 3379

## அவசர தேவை

சிறுநீரகம் பாதிப்படைந்த நபர் ஒருவருக்கு அவசரமாக 0+வகையான சிறுநீரகம் தேவைப்படுகின்றது.
வயதெல்லை 30-50

தொடர்பு:- 076 476 7400

## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் தங்கி நின்று குழந்தை பராமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை
வயதெல்லை- 25-50

077 306 9909

## காணி விற்பனைக்கு

நுணாவில் A9 வீதியில் 500M தூரத்தில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

077 306 9909

## வேலையாட்கள் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள குளிர்பான நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: 077 306 3733

## வேலையாட்கள் தேவை

கல்லியங்காட்டில் இயங்கி வரும் உணவகமொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.


**1.பரோட்டா தயாரிப்பவர்**
**2.Delivery boy**

( தங்குமிட வசதி இலவசம்)

076 982 7517


உயர்வகை பல் வைத்திய சேவைக்கு....

For Quality, Professional Dental Care




INTERNATIONAL DENTAL CARE

professional Dental Care in Sri Lanka

INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD

**Colombo Branch**
N0. 79/9, W.A.Silva Mw,
Wellawatta, Colombo - 06,Sri Lanka.
Tel : + (94) 11 2507070,
Mob : + (94) 77 0139372, + (94) 77 0139376
W.App : + (94) 76 5224273

**Vavuniya Branch**
Raaj Medical Lab.
No:10, Bazaar Street, Vavauniya, Sri Lanka.
Tel : + (94) 24 2221577
Mob : + (94) 77 0139374
W.App : + (94) 77 059 5221

**Jaffna Branch**
N0. 84, Stanly Road,
Jaffna, Sri Lanka.
Tel : + (94) 21 2220833
Mob : + (94) 77 0031547
W.App : + (94) 77 003 1548

Web : www.internationaldentalsrilanka.com
Email : internationaldentalcare@gmail.com


20.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

வெறியயர் வெங்களத்து வேல்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
அறிவுடையாளர்கண் இல்.

– நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | சித்திரை 07 | ஞாயிற்றுக்கிழமை (20.04.2025) | சிகரம் :141

# கிட்டு பூங்காவில் அநுர கூறியதன் பொருள்?



○ நிலாந்தன்

திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது இலகுவானது. வடக்கில் இதை மையமாக வைத்து செய்யப்படும் அரசியலை விலக்கி வைக்கவேண்டும். தெற்கில் இதை மையமாக வைத்துச்செய்யப்படும் அரசியலை விலக்கி வைக்கவேண்டும். திஸ்ஸ விகாரையை மையமாகக் கொண்ட அரசியலை விலக்கிவிட்டு, விகாராதிபதியும் மக்களும் சேர்ந்து பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்." இது கடந்த வியாழக்கிழமை கிட்டு பூங்காவில் அநுர பேசிய பேச்சின் ஒரு பகுதி. தையிட்டி விகாரையில் இருக்கும் தமிழ் அரசியலையும் சிங்கள அரசியலையும் நீக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். மிகத் தவறான ஒப்பீடு. தையிட்டி விகாரை என்பதே ஓர் அரசியல் விவகாரம்தான். அது ஓர் ஆக்கிரமிப்பு; நிலப்பறிப்பு; சிங்கள பௌத்த மயமாக்கலின் ஆகப்பிந்திய நடவடிக்கைகளில் ஒன்று. அதில் உள்ள சிங்கள பௌத்த அரசியல்தான் இங்கு பிரச்சினையே. அதற்கு எதிராகத்தான் தமிழ் மக்கள் போராடுகிறார்கள்.

தமிழ் மக்களுடைய ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு போராட்டம். இங்கு ஒடுக்கும் அரசியலையும் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் அரசியலையும் சமப்படுத்தமுடியாது. ஒடுக்குமுறை இல்லையென்றால் போராட்டத்துக்குத் தேவையும் இருக்காது. எனவே முதலில் நீக்கவேண்டியது அந்த விகாரையைக் கட்டிய சிங்கள பௌத்த அரசியலைத்தான்.

அதைவிடக் குறிப்பாக பிக்குகள் அந்த அரசியலின் ஒரு பகுதி. இலங்கைத்தீவின் இன ஒடுக்குமுறையில் மகாசங்கம் அரச கட்டமைப்பின் ஒரு பகுதி. எனவே ஒடுக்குமுறையின் ஒரு பகுதியாகக் காணப்படும் மதகுருக்களிடம் போய் பேசித்தீருங்கள் என்று கூறுவதே ஒடுக்குமுறைதான். எனவே தையிட்டி விகாரை விடயத்தில் அதன் அரசியலை நீக்கவேண்டும் என்று அநுர கேட்பதே அரசியல்தான். ஒடுக்கும் அரசியல்தான்.

அப்படித்தான் அவருடைய யாழ்.மாநகரசபைக்கான பிரதான வேட்பாளர் கூறுகிறார், தான் அரசியல் கதைப்பதை விடவும் அபிவிருத்தியைத்தான் கவனிக்கப்போவதாக. ஆனால் அரசியல் இல்லாமல் அபிவிருத்தி இல்லை. எதை அபிவிருத்தி செய்வது? எங்கே செய்வது? எப்படிச் செய்வது? எப்பொழுது செய்வது? யாரை வைத்துச் செய்வது? போன்ற எல்லாமே அரசியல் தீர்மானங்கள்தான். அபிவிருத்தி என்பது அரசியலின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி. இந்த அடிப்படை விளக்கம் வேட்பாளரிடம் இல்லையா? அல்லது அபிவிருத்திக்குள் இருந்து அரசியலை நீக்கும் அரசியலை அவர் வேண்டுமென்று செய்கிறாரா?

அதேபோலதான் உள்ளூராட்சிசபைத் தேர்தல் களம் தொடர்பாக ஒரு கோட்பாட்டு விடயம் சுட்டிக்காட்டப்படுகிறது. உள்ளூராட்சி சபைகள் உள்ளூருக்கானவை; உள்ளூர் உணர்வுகளைப் பிரதிபலிப்பவை உள்ளூர் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான பயில்களங்கள். எனவே அந்த சபைகளுக்கான தேர்தல் களங்களிலும் தமிழ்த்தேசிய அரசியலைப் பேசக்கூடாது என்று ஒரு விளக்கம். அப்படிச் சொல்பவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை விளங்கிக்கொள்ளவில்லை. தேசியவாத அரசியல் என்றால் என்ன? ஒரு மக்கள் கூட்டத்தை ஆகப்பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது. அதை எங்கிருந்து தொடங்க வேண்டும்? கீழிருந்து மேல் நோக்கித்தான் அதைத் தொடங்கவேண்டும். மேலிருந்து கீழ்நோக்கி அல்ல. அதாவது ஊர்களில் இருந்து தொடங்கவேண்டும். எனவே கீழிருந்து மேல் நோக்கி அதாவது ஊர்களில் இருந்துதான் தேசியவாதக் கட்டமைப்புகளை உருவாக்கவேண்டும்.

ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் காணப்படும் அசமத்துவங்கள் அதிகமாக கிராமங்களில்தான் நிலவும். பால்,சாதி,சமய,பிரதேச அசமத்துவங்கள், முரண்பாடுகள் கிராமங்களில் ஆழமாக இருக்கும். எனவே அங்கேயே அவற்றைத் தீர்க்கவேண்டும். அதற்கு தேசியவாத தரிசனமும் அணுகுமுறையும் வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது என்றால் எந்த அடிப்படையில் கூட்டிக்கட்டுவது? ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில்தான் அதைச் செய்யவேண்டும். ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற அடிப்படையில் ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் தேசியவாத அரசியலைக் கட்டியெழுப்பவேண்டும். எனவே தேசிய உணர்வைக் கட்டியெழுப்புவது என்ற விடயத்தை ஊர்களில் இருந்தே, ஊராட்சி அரசியல் களத்தில் இருந்தே தொடங்கவேண்டும்.

ஊரில் சாதிமானாக இருப்பவர், சமய வெறியராக இருப்பவர், பால் அசமத்துவத்தை ஆதரிப்பவர் போன்றவர்களை தேர்தலில் நிறுத்தி உள்ளூராட்சி சபைகளை உருவாக்க முடியாது. ஊருக்கு நல்லவர்; அல்லது சாதிக்கு நல்லவர்; அல்லது சமயத்துக்கு நல்லவர்; தேசியவாதியாக இருப்பார் என்று இல்லை. உள்ளூராட்சி சபைகள் உள்ளூர்த் தன்மை மிக்கவை என்றாலும் உள்ளூரில் இருக்கக்கூடிய அசமத்துவங்களை தேசியவாத நோக்குநிலையில் கடக்கின்ற, நீக்குகின்ற ஒருவர்தான் உள்ளூராட்சி சபைகளில் உறுப்பினராக இருக்கவேண்டும். எனவே வேட்பாளர்களைத் தெரியும்போது தமிழ்த்தேசிய நோக்கு நிலையில் இருந்தே அதைச் செய்ய வேண்டும். இப்படிப் பார்த்தால் தேசியவாத அரசியலை கிராமங்களில் இருந்துதான் கட்டியெழுப்ப வேண்டும். எனவே உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் அதற்குரியவைதான். உள்ளூர் உணர்வுகளைப் பிரதிபலிப்பது என்பது தமிழ்த்தேசிய உணர்வுக்கு எதிராக இருக்கமுடியாது. அது தமிழ்த் தேசிய கூட்டுணர்வின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்

உள்ளூர் அபிவிருத்தி தொடர்பான பொருத்தமான தரிசனங்களைக் கொண்டவர்களும், அதேசமயம் உள்ளூர் அசமத்துவங்களை நீக்கி ஊர் மட்டத்தில் தேசிய ஐக்கியத்தை, தேசியக் கூட்டுணர்வைக் கட்டியெழுப்பக்கூடியவர்களுந்தான் தேர்தலில் நிற்க வேண்டும். அங்கிருந்து தொடங்கி மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தாயகம் அளவிலும் தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். கிராம மட்டத்தில் பலமான கட்டமைப்புகளை அல்லது வலைப்பின்னலையோ கொண்டிராத கட்சி மாகாண மட்டத்திலோ அல்லது தாயக அளவிலோ வெற்றிபெறமுடியாது. தமிழரசுக் கட்சியின் பலமே அதற்கு கிராம மட்டங்களில் இருந்த அடிமட்ட வலைபின்னல்தான். அந்தக்கட்சி வடக்கு, கிழக்கு தழுவியதாக எழுச்சிபெறவும் அதுதான் காரணம். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் தொகுதியில் வெற்றிபெற்ற ஒரே வேட்பாளராகிய சிறீதரனுக்கு கிளிநொச்சியில் உள்ள பலமும் அதுதான். எனவே கிராம மட்டத்தில் பலமான கட்டமைப்பு இல்லையென்றால் மாவட்ட, மாகாண, தாயக மட்டத்தில் கட்சியைப் பலப்படுத்தமுடியாது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுடைய ஒவ்வொரு அரசியல் அசைவும் தம்மைத் தேசமாகத் திரட்டும் நோக்கத்தைக் கொண்டதாகவே இருக்கவேண்டும். அதை குடும்பத்தில் இருந்தே தொடங்கவேண்டும். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு குடும்பத்திலேயே வாக்குகள் சிதறி விழுந்தன. தமிழ் மக்கள் ஒரு சமூகமாகச் சிதறுகிறார்கள். எனவே ஊர்களில் இருந்தே தேசத்தைக் கட்டியெழுப்பத் தொடங்கவேண்டும்.

உள்ளூராட்சி சபைகளில் மட்டுமல்ல மாகாண சபைகளிலும் இனப்பிரச்சினையை அதிகம் விவாதிக்கக்கூடாது என்ற ஒரு விவாதம் விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தபொழுது எழுந்தது. வட மாகாண சபையில் அபிவிருத்தித் திட்டங்களை விடவும் இனப்பிரச்சினை அரசியல்தான் அதிகமாக பேசப்பட்டது என்ற ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. விக்னேஸ்வரனிடமும் வடமாகாண சபையிடமும் தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலான பொருத்தமான பொருளாதார தரிசனங்கள் இருக்கவில்லை என்பது உண்மை. ஆனால் அதற்காக மாகாண சபை மட்டத்தில் இனப்பிரச்சினையைப் பேசக்கூடாது என்று கூறுவது தமிழ் அரசியலை தமிழ்த் தேசிய நீக்கம் செய்யும் நோக்கத்தைக் கொண்டது.

மாகாணசபை எனப்படுவது மக்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு சட்டமன்றம். ஒற்றையாட்சிக்கு கட்டமைப்புக்குள் அதற்குள்ள அதிகாரங்கள் போதாது. எனினும் இருக்கின்ற அதிகாரங்களை உச்சபட்சமாகப் பயன்படுத்தி எப்படி மாகாணத்தைக் கட்டியெழுப்பலாம் என்பது தொடர்பில் பொருத்தமான பொருளாதார தரிசனங்கள் தமிழ்க் கட்சிகளிடம் குறைவு. அதேசமயம் மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு மாகாணசபையில் இன அழிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை மகத்தானது. அத்தீர்மானத்துக்கு மக்கள் ஆணை உண்டு. தேச நிர்மாணம் என்பது அதாவது தேசத்தைக் கட்டியெழுப்புவது என்பது அதன் பொருளாதார அர்த்தத்தில் தமிழ்த் தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுதான். இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் உள்ளூராட்சிசபை மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் மாகாண சபை மட்டத்திலும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நிகழ்ச்சிநிரல் இருக்கவேண்டும். உள்ளூராட்சி சபைகளில் இனப் பிரச்சினையைப் பேசக்கூடாது என்பது தையிட்டி விகாரையில் இருந்து இன அரசியலை அகற்றுவோம் என்று கூறும் அநுரவின் கோரிக்கைக்கு நிகரானது. அது ஒடுக்குமுறையின் ஒரு பகுதி.

தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான கோஷம் "வெற்றி நமதே ஊரும் எமதே"என்பதாகும். உள்ளூராட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றியை அடுத்த கட்டத்திற்கு விஸ்தரிப்பதுதான் அவர்களுடைய நோக்கம். நாடாளுமன்றத் தேர்தல்களில் அவர்கள் பெற்ற வெற்றியானது தமிழ்த்தேசிய கட்சிகளைத் தோற்கடிக்கலாம் என்ற நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. இப்பொழுது தமிழ்த் தரப்பு எனப்படுவது தமிழ்த் தேசியத் தரப்பு மட்டும் அல்ல என்பதனை அவர்கள் அழுத்தமாக டில்லியிலும் ஐ.நா.விலும் கூறத்தொடங்கி விட்டார்கள்.

உள்ளூராட்சிசபைகளிலும் அந்த வெற்றியை அவர்கள் ஸ்தாபிப்பார்களாக இருந்தால் அதாவது ஊரும் அவர்களிடம் போய்விட்டால் தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசமாக; தேசிய இனமாகக் கருதவில்லை என்று கூறத்தொடங்கி விடுவார்கள். எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழ் மக்கள் மிகத் தெளிவான முடிவை எடுக்கவேண்டும். தாங்கள் ஒரு தேசமா? இல்லையா? என்று. அது உள்ளூர்த் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு தேர்தல்தான். உள்ளூர் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஒரு தேர்தல்தான். அதைவிட ஆழமான பொருளில் அது தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலின் ஒரு பகுதி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.ஆர். அறிமுகப்படுத்திய மொசாட் அணுகுமுறையும் அநுரவின் புதிய காய்நகர்த்தலும்

அ.நிக்ஸன்




**தமிழ்த்தரப்பில் உள்ள கல்வியாளர்கள், துறைசார்ந்த வல்லுநர்களை நேரடியாக தேசிய மக்கள் சக்தியில் இணைத்துக்கொள்ள அல்லது மறைமுக ஆதரவு வழங்கும் நகர்வுகளை கன கச்சிதமாக அநுரகுமார மேற்கொண்டுவருகிறார். இதற்காக வழங்கப்படும் விலைகள் பெறுமதிகள் வேறு. உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் குறிப்பாக வடமாகாண மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும், இல்லையேல் நிதி கிடைக்காது என்ற எச்சரிக்கைகளின் பின்னாலும் அநுரகுமாரவின் அந்த நகர்வுகளின் நுட்பங்களை புரியக்கூடியதாக உள்ளது.**

வடக்கு, கிழக்கு இணைப்பு, சுயநிர்யண உரிமை போன்ற சுய ஆட்சிக்கான ஈழத் தமிழர்களின் நியாயமான அரசியல் விடுதலைக் கோரிக்கையை சிதைக்க அன்று ஜே.ஆர். ஆரம்பித்த இஸ்ரேலிய ஆதரவு என்ற காய்நகர்த்தல் இன்று அநுரகுமாரவின் அரசாங்கத்திலும் மிக நுட்பமாகக் கையாளப்படும் அணுகுமுறைகள் தென்படுகின்றன. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையைக் கடந்து இன அழிப்பு என்ற விவகாரம் கனடாவில் பிரதான அரசியற்கட்சிகளிடையே சூடுபிடித்துள்ள பின்னணியில் சர்வதேசத்தை ஜே.ஆர். பிரேமதாஸ கால அணுகுமுறைகளை, புதிய வடிவத்தில் அநுரகுமார திஸாநாயக்காவின் அரசாங்கம் நுட்பமாகக் கையாள ஆரம்பித்துள்ளது.

மக்களை அரவணைத்தல், குழந்தைகளை தூக்கி முத்தமிடுதல் போன்ற இராஜதந்திரங்கள் இஸ்ரேலிய மொசாட்டின் உத்திகளில் ஒன்று. ஜே.ஆர். மொசாட்டின் பிரித்தாளும் தந்திரங்களை அன்று கையாண்டாலும், பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கடந்து மக்கள் மத்தியில் துணிவுடன் சென்று குழந்தைகளைத் தூக்கி முத்தமிடுவது, சிறுவர்களுக்குக் கைகொடுப்பது, வயோதிபர்களுடன் அனுதாபமாகப் பேசுவது மற்றும் தேர்தல் காலத்தில் சலுகைகள் நிவாரணங்கள் பற்றிய தகவல்களை மேடையில் வைத்து அறிவிப்பது போன்ற அரசியல் தந்திரங்களை, 1988 இல் பிரேமதாஸதான் அறிமுகப்படுத்தினார்.

அந்தத் தந்திரேபோயங்கள் சந்திரிகா, மஹிந்த, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, கோத்தாபய என்று நீடித்து. இன்று "மாற்றம்", "சோசலிசம்" என்று மார்தட்டி ஆட்சிக்கு வந்துள்ள அநுரகுமாரவரையும் வந்து நிற்கிறது. மொசட்டின் ஒத்துழைப்பைப் பெற்ற ஜே.ஆர். ஜயவர்த்தன மாத்திரம் இந்த மாதிரியான அரசியல் பித்தலாட்டங்க ளைச் செய்யவில்லை. ஆனால் அவர் 1978 இல் உருவாக்கிய ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் மூலமான சட்டங்களைப் பயன்படுத்தியே மேற்படி அரசியற் தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பௌத்ததேசியக் கடமையைச் செய்து முடித்திருக்கின்றனர்.

அதாவது மொசாட்டின் பரிந்துரைகளின் பிரகாரம் வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள், பௌத்தமயமாக்கல் சிங்கள அரச அதிபர்கள் நியமனம். சிங்களப் பெயர்களைத் தமிழ் கிராமங்களுக்குச் சூட்டுதல், பாடத்திட்டங்களில் பௌத்தசமய வரலாறுகளைப் புகுத்துதல் , வரலாற்றுத் திணிப்பு போன்றவை மொசாட்டின் அணுகுமுறைகள்தான்.

அதேபோன்று, சிறிமாவோ பண்டாரநாயக்க 1972 இல் உருவாக்கிய இலங்கைக் குடியரசின் முதலாவது ஒற்றையாட்சி அரசியல் யாப்புச் சட்டங்கள் மூலமாக அறிமுகப்படுத்திய "தமிழர்களின் ஆதரவுத் தந்திரம்" அதாவது துரையப்பாவை அருகில் வைத்துக்கொண்டு தமிழர்களின் அரசியல் உரிமையைக் கொழும்புடன் கரைப்பதற்கு சிறிமாவோ அறிமுகப்படுத்திய நஞ்சு வேலைத் திட்டங்களை, ஜே.ஆரில் இருந்து இன்றைய அநுரகுமார வரை காணமுடிகிறது. அதேபோன்று, 1983 இல் இருந்து 2009 மே மாதம் வரையான போர்க்காலத்தில் தமிழ் முஸ்லிம் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தி தமிழர்களிடையே முரண்பாடுகள், மோதல்கள், பிரிவினைகள் போன்ற சிக்கல்களை உருவாக்கும் நஞ்சு வேலைத் திட்டங்களை மொசாட்டின் ஆலோசனையோடு அறிமுகப்படுத்தியவர் ஜே.ஆர்.

2009 மே மாதத்துக்குப் பின்னரான கடந்த 15 வருடங்களிலும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைச் சிதைக்க இலங்கை ஒற்றை ஆட்சி அரசு இவ்வாறானஆயுதக் குழுக்களைப் பயன்படுத்தியிருக்கிறது. ஆனாலும் இன்றைய அநுரகுமார, ஆயுதக் குழுக்களை வேறு கோணத்தில் அணுகமுற்படுகிறார். பிள்ளையான் கைது அதனை வெளிப்படுத்துகிறது. அதன் காரணகாரியம் விரைவில் தெரியவரும். ஓர் "அரசு அற்ற இனம்" அரசு உள்ள இனம் ஒன்றினால் எவ்வாறு கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செய்யப்படும் என்பதற்கு உலகில் சில உதாரணங்கள் உள்ளன.

"நிதி "நீதி" "நிர்வாகம்" என்ற கட்டமைப்புள்ள அரசு ஒன்று தரைப்படை, விமானப்படை, கடற்படை என்ற முப்படைகளையும் பொலிஸாரையும் வைத்துக் கொண்டு எவ்வாறு மற்றொரு இனத்தை இன அழிப்புச் செய்யும் என்பதற்கு இஸ்ரேல் என்ற ஓர் அரசு உலகத்துக்கு உதாரணமாகிறது.

1983 இல் போர் ஆரம்பித்தும் ஜே.ஆர்., இஸ்ரேலுடன் நட்புறவுகொண்டார். மொசாட் என்பது இஸ்ரேலிய அரசின் அதிகாரபூர்வ புலனாய்வுப் பிரிவு. 2025 இல் இந்தப் பிரிவு மேலும் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் மற்றும் இலங்கை போன்ற இன ஒடுக்கல் விவகாரங்களில் ஈடுபடும் அரசுகளுக்கு ஒத்துழைத்தல் என்ற செயற்பாடுகளை இஸ்ரேல் விரிவுபடுத்தியுள்ளது.

இந்த விரிவுபடுத்தல்களில் இலங்கை தமக்குரிய ஆதரவுகளைப் பெற்றுள்ளது. அன்று ஜே.ஆர். இஸ்ரேலிய மொசாட்டின் உதவிகளை பெற்றுக்கொண்டு தமிழ்ப் போராளிகளுக்கு எதிராகச் செயற்பட்டபோது, இந்தியாவின் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அதனைக் கண்டித்திருந்தார். ஆனாலும் ஜே.ஆர். இலங்கையின் தேசியப் பாதுகாப்பு என்ற அடிப்படையில் வடக்கு, கிழக்கில் சிங்களமயமாக்கல் தொடர்பான விடயங்களுக்கு மொசாட்டின் ஒத்துழைப்பை துணிவுடன் பெற்றார். இப்போது அநுரகுமாரவின் அரசும் இஸ்ரேலுடன் நெருங்கிய தொடர்பை பேணுகின்றது. இந்தியாவின் மோடி அரசு அதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. ஏனெனில் காசாப் போர் விவகாரத்தில் , இஸ்ரேல் அரசின் பக்கமே இந்தியா நிற்கின்றது. அமெரிக்காவும் இஸ்ரேல் ஆதரவுத் தளத்தையே கொண்டுள்ளதால், இந்தியா இஸ்ரேலிய ஆதரவுடன் செயற்படுவதாகவே அவதானிகள் கருதுகின்றனர். இதனை இலங்கையும் நன்கு பயன்படுத்துகின்றது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த நகர்வைக் கையாண்டிருந்தார். ஆனால் தற்போது அநுரகுமார திஸாநாயக்க இந்த நகர்வை முழுமையாக வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய அரசியலை ஒழிக்க வெவ்வேறு புதிய கோணங்களில் காய்நகர்த்துகின்றார். இதன் ஒரு பகுதியாகவே தமிழ்த்தரப்பில் உள்ள கல்வியாளர்கள், துறைசார்ந்த வல்லுநர்களை நேரடியாக தேசிய மக்கள் சக்தியில் இணைத்துக்கொள்ள அல்லது மறைமுக ஆதரவு வழங்கும் நகர்வுகளை கன கச்சிதமாக அநுரகுமார மேற்கொண்டுவருகிறார். இதற்காக வழங்கப்படும் விலைகள், பெறுமதிகள் வேறு. ருஸ்டி என்ற முஸ்லிம் இளைஞன் கொழும்பில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி பின்னர் கடும் அழுத்தங்களினால் விடுதலை செய்யப்பட்டமை போன்ற நகர்வுகளும், உள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் குறிப்பாக வடமாகாண மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும், இல்லையேல் நிதி கிடைக்காது என்ற எச்சரிக்கைகளின் பின்னாலும் அநுரகுமாரவின் அந்த நகர்வுகளின் நுட்பங்களைப் புரியக்கூடியதாக உள்ளது. கிழக்கில் முஸ்லிம் தீவிரவாதம் உருவாகி வருவதாகச் சமீபத்தில் அரசாங்கம் விடுத்த எச்சரிக்கைகளும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விவகாரத்தில் பிள்ளையான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளமையும் வெளிச்சக்தி ஒன்றின் பரிந்துரைகளாக இருக்கலாம் என்ற சந்தேகங்கள் இல்லாமில்லை. இந்தப் பின்புலத்தோடுதான் இந்திய இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய சந்தேகங்களும் எழுகின்றன. அதாவது எதிர்காலத்தில் தமிழ்த் தேசியம் தொடர்பாகத் தீவிரமான அழுத்தங்கள் ஜனநாயக வழியில்கூட எழுந்துவிடக்கூடாது என்ற பிரதான இலக்கு, இந்திய இலங்கை அரசுகளிடம் வேரூன்றியுள்ளது என்பதையே அநுரகுமாரவின் பேச்சுகளும் நகர்வுகளும் காண்பிக்கின்றன. புதுடில்லியின் ஒத்துழைப்பு இதற்கு இல்லாமலில்லை.

பிரேமதாஸ ஆரம்பித்த மக்கள் சந்திப்பு அணுகுமுறை, அநுரவின் காலத்தில் அதாவது 2025 இல் மாறுபட்ட, ஆனால் தமிழர்கள் முழுமையாக ஏற்கக்கூடிய நம்பக்கூடிய கைங்கரியங்கள் மிக அழகாகவும் நுட்பமாகவும் அரங்கேற்றப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த நுட்பங்களையும் மொசாட்டின் மீள் வருகையையும் புரிந்துகொண்டு அதற்கு எதிரான வியூகங்களை வகுப்பார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி



விசும்பின் துளி வீழின் அல்லால்...



## தெரியுமா?

பூமி தினம் நாளை மறுநாள்

எங்கள் வலு, எங்கள் கோள்

உலகளாவிய தாக்கத்திற்காக உள்ளூர் செயற்பாடுகளைக் கொண்டாடுதல்

22 ஏப்ரல் 2025

காலநிலையும் சூழல் தொகுதிகளும்

- வரலாற்றில் மிகவும் வெப்பமான தசாப்தம்!
- மனித நடவடிக்கைகளால் ஒரு மில்லியனுக்கும் அதிகமான உயிரினங்கள் அழிவடையும் அபாயத்தை எதிர்கொள்கின்றன!
- போர்த்துக்கல் நாட்டின் பரப்பளவை ஒத்த 10 மில்லியன் ஹெக்டேயர் காடுகள் வருடாந்தம் அழிக்கப்படுகின்றன
- உலகளாவிய ரீதியில் நால்வரில் ஒருவர் தீவிர நீர் நெருக்கடியை எதிர் கொள்கிறார்!

பூமி தினத்தின் நோக்கு

- சமூகம் முன்னெடுக்கும் சுற்றுச் சூழல் செயற்பாடுகள்
- நிலைபேறான தன்மைக்கான கல்வி
- கொள்கைகளுக்கு அறிவிக்கும் தரவும் விஞ்ஞானமும்
- இயற்கை வளங்களைப் பேணுதல்
- பாதிக்கப்படும் தன்மை கூடிய சமூகங்களுக்கான நீதி

## புலமையாளர் பதில்

**கேள்வி: நீண்டகாலமாகச் சேமித்து வைக்கப்பட்ட போத்தல் தண்ணீரைக் குடிப்பது பாது காப்பானதா?**

*உ. தர்மிகா, கொக்குவில்*

**பதில்:** பொதுவாக, தரம்மிக்க போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரைச் சரியான முறையில் சேமித்து வைத்தால் நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கமுடியும். போத்தலில் நீர் அடைக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை குடிப்பதற்கு உகந்தது எனவே பொதுவாகக் கருதப்படுகிறது. தண்ணீர் தானாகக் கெட்டுப்போவதில்லை என்றாலும், நீரைக் கொண்டிருக்கும் நெகிழிப்(Plastic) போத்தல், வெப்பம் அல்லது வெளிச்சத்தினை எதிர்கொள்ளும் போது, காலப்போக்கில் அதனுள் உள்ள நீரின் சுவை மற்றும் தரம் குறைய வாய்ப்புண்டு.

போத்தல் நீர் நுகர்வதற்கு உகந்தது எனப் பொதுவாகக் கருதப்பட்டாலும், அது மாசுபடவும் வாய்ப்புண்டு. போத்தல் நீர் அடைக்கப்படும்போதோ அல்லது நீர் பெறப்படும் மூலத்திலிருந்தும்கூட நுண் நெகிழித் (microplastic) துகள்கள், பக்டீரியா மற்றும் பிற மாசுகள் காரணமாக நீர் தன் தரத்தை இழக்கிறது. மாசடைகிறது. போத்தலில் அடைக்கப்பட்ட நீர் அதிக காலம் வெளிச் சூழலுடன் தொடர்பிலிருந்தால் அது நீரின் தரத்தை எதிர்மறையாகப் பாதிக்கும். இதனால் இரைப்பை, குடல் சார் பிரச்சினைகள் மற்றும் நீரிழிவு, உடற்பருமன் போன்ற பல்வேறு உடல்நல உபாதைகள் அதிகரிக்கக்கூடும்.

பொதுவாகவே வெப்பமான அறையில் போத்தல் நீரைச் சேமித்து வைத்தல் பரிந்துரைக்கப்படுவதில்லை. அதிகளவு வெப்பநிலையை எதிர்கொள்ளல் நெகிழிப் போத்தல்களில் இருந்து இரசாயனப் பதார்த்தங்கள் கசிந்து நீரில் சேர்வதற்கு வழிவகுக்கும். அவ்வாறு சேரும் பதார்த்தங்களின் அளவுகள் எப்போதும் பாதுகாப்பானதெனக் கருதப்படும் தரங்களைவிட அதிகமாக இல்லாவிட்டாலும், நீண்ட கால நோக்கில் அவை ஆபத்தானவை.

பொதுவாக தெற்காசியப்பிராந்தியத்தில் கிடைக்கப்பெறும் குழாய் நீரைவிட போத்தலில் அடைக்கப்பட்ட நீர் பாதுகாப்பானதெனக் கருதப்பட்டாலும், அந் நீரில் எமது உடலுக்குத் தேவையான தாதுக்கள் இருப்பதை உறுதிசெய்வது அவசியம். அத்தகைய போத்தலில் அடைக்கப்பட்ட நீர் உண்மையிலேயே தலைகீழ் சவ்வூடுபரவல் (RO) முறையிலான வடிகட்டிய நீராதலால் அவற்றில் மனித ஆரோக்கியத்துக்குத் தேவையான அத்தியாவசிய தாதுப்பொருள்கள் இருப்பதில்லை. ஆயினும் அவற்றைச் செயற்கையாகச் சேர்த்த பின்னர் அந் நீரைப் போத்தலில் அடைத்து விற்கும் வழக்கமும் காணப்படத்தான் செய்கிறது.

**பேராசிரியர் சரவணமுத்து விக்னேஸ்வரன்**
*தகைநிலைப் பேராசிரியர்*
*தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,*
*சிட்னி, அவுஸ்திரேலியா*



## அறைகூவல்!

# ஒவ்வொரு துளியும் கதை சொல்லும்

எங்கள் தாய் நிலத்திலே, ஒவ்வொரு நீர்த்துளியும் ஒரு போராட்டத்தின், தவிப்பின், பொறுமையின், தாங்குதிறனின் கதையொன்றைக் காவியபடி, உலர் களங்களைக் கடந்துசெல்கிறது. நாம் பதிக்கும் சுவடுகளின் கீழே மறைந்திருக்கும் எங்கள் உயிர் நாடியான நிலத்தடி நீரை மெல்ல மெல்லத் தொலைத்துக்கொண்டிருக்கிறோம். மிகை பாவனையால் மட்டுமன்றி எங்கள் அலட்சியத்தாலும், சமமற்ற அணுகலாலும், எம் நிலைபேறான எதிர்காலத்தைப் பற்றி இம்மியளவேனும் சிந்திக்காமல் எங்கோ தொலைதூரத்திலே குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து எடுக்கப்படும் முடிவுகளாலும் எங்கள் நிலத்தடி நீர் வெகுவாகப் பாதிக்கப் பட்டுவருகிறது.

இங்கு தான் இப்பிரச்சினையின் மையப்புள்ளி வெளித்தோன்ற ஆரம்பிக்கிறது. அது எங்கள் நிலத்தடி நீருடன் இணைந்த விஞ்ஞானம் மட்டுமல்ல. அதை யார் கட்டுப்படுத்துகிறார்கள்? அதனால் யாருக்கு நன்மை கிட்டுகிறது? அதனால் ஏற்படும் செலவையும் இழப்புகளையும் யார் தாங்குகிறார்கள் என்ற அரசியலையும் உள்ளடக்கியதாகும்.

ஆதலினால்தான், நிலத்தடி நீரைப் பாதுகாத்தல் என்பது தனியே குழாய்கள், கிணறுகள் மற்றும் குழாய்க்கிணறுகளுடன் தொடர்புபட்ட விடயம் மட்டுமல்ல என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். அது மக்கள் அதிகாரம் சுட்டிணைவுகள் என்ற அம்சங்களை ஒட்டியதாகவும் அவற்றிற்கிடையிலான சிக்கலான இடைத்தொடர்புகளுடன் பின்னிப்பிணைந்ததாகவும் காணப்படுகிறது.

நிலத்தடி நீருடன் ஏதேனும் ஒருவகையிலேனும் தொடர்புடைய அனைத்துத் தரப்பினரும் (அரச அலுவலர்கள், அரசியல்வாதிகள், உள்ளூர் விவசாயிகள், இளைஞர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மக்கள் குழுக்கள், ஆய்வாளர், பாடசாலைச் சமூகம், மற்றும் பலர்) தமக்கேன் வம்பென அமைதியாகக் கடந்துபோகாமல், ஒன்றிணைந்து, ஒரு நேர்மையான உரையாடலை நாடி வருவார்களேயானால் அற்புதங்கள் நிகழும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.


அத்தகைய உரையாடல்களூடாக, நிலத்தடி நீருடன் தொடர்புடைய சகல தரப்பினர்கள் மத்தியிலும் ஒரு பரஸ்பர நம்பிக்கை கட்டியெழுப்பப்படும், தீர்வுகள் பகிரப்படும், நீதி மறுக்கப்படாமல் கிடைக்கப்பெறும்.

நிலத்தடி நீரென்றால் வாழ்வன்றி வேறில்லை என்ற எங்கள் தாய் நிலத்திலே, நாம் ஒருவரையொருவர் குறை சொல்லிச் சுட்டுவதை விட்டு எம் கரங்களைக் கோர்க்க வேண்டிய காலம் கனிந்திருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றிணையும்போது, எங்கள் இதயங்களும் புத்தியும் ஒரு புள்ளியிலே சந்திக்கும்போது, நிலத்தடி நீர் மட்டுமன்றி ஒரு சமூகமாக நாங்களும் பாதுகாக்கப்படுவோம். அப்போதுதான் ஒருவரையேனும் தாகத்துடன் தவிக்க விட்டுவிடாத எதிர்காலத்தை எம்மால் உருவாக்க முடியும்.

நிலத்தடி நீரைப் பேணுவதற்காக வேனும் இந்த ஒற்றுமையின் உணர்வை எங்கள் தாய் நிலத்திலே உருவாக்கி விடவேண்டும் என்ற பெருங்கனவுடனேயே யாழ். பல்கலைக்கழகத்தின் வஸ்பார் திட்டம் தாபிக்கப்பட்டு, செயற்படுத்தப் பட்டுவருகிறது. அது விஞ்ஞானத்துடனும் ஆய்வுகளூடனும் செற்றிட்டங்களுடனும் வரைபடங்களூடனும் பிரசுரங்களுடனும் மட்டும் நின்று விடவில்லை. எங்கள் நிலத்தடி நீர் சார்ந்த அறிவின் பல் பரிமாணங்களை, கதைகளூடாகவும், உரையாடல்களூடாகவும், செவிமடுத்தலின் சக்தியூடாகவும், பொது மக்களிடம் கொண்டுசேர்க்கும் பெரும் பணியை அது செய்கிறது.

குடிநீரைத் தேடி நெடுந்தூரம் பயணிக்கும் ஒரு தாயின் கதையாகட்டும்… "எங்கள் கிணற்று நீர் ஏன் உவரானது?" என வினவும் மாணவனொருவனின் வினாவாகட்டும்…. சாதாரண மக்களின் குரல்களை மேடைகளிலும் அரச அலுவலகங்களிலும் நிகழ்வுகளிலும் எதிரொலிக்கச் செய்யும் பெரும்பணி அதுவாகும்.

வஸ்பார் திட்டம் வலியுறுத்தும் நிலத்தடி நீருக்கான கூட்டுச் செயற்பாடுகளின் அடிப்படையையே இவ்வாண்டின் பூமி தினத்தின் தொனிப்பொருளும் உணர்த்தி நிற்கிறது. அறிவு பகிரப்பட்டு, நிலத்தடி நீரின் கண்காணிப்பு உள்ளூர் மக்களாலேயே மேற்கொள்ளப்பட்டு, நிலத்தடி நீரைப்பேணுதலானது எம்மத்தியில் பகிரப்பட்டிருக்கும் பாரிய கடமை என நாம் உணர்ந்து செயற்படும்போது எத்தகைய சாதகமான மாற்றங்கள் உருவாகலாம் என்பதற்கு வஸ்பார் ஒரு வாழும் உதாரணமாகும்.





எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி துளியின் 13 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி: **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemiology, Faculty of Medicine, University of Jaffna;** மின்னஞ்சல்: **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



க.அம் ஷிகா
தரம் 4C
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை



இ.கௌசிகா
தரம் 9
யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி.




க.அக் ஷிதா
தரம் 9F
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை




ர.பௌத்தரின்
தரம் 7
யா/இந்து கல்லூரி




K.அபினிதா
தரம் 4
சென். ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம்



சி.அபிசன்
தரம் 7A
யா/ இந்துக் கல்லூரி



க.திஷானன்
தரம் - 2E
வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்



எஸ்.அபிஷயா
தரம் - 11A
யா/ இனுவில் மத்திய கல்லூரி



தி.பபிஸ்
தரம்9A
யா/பரியோவான் கல்லூரி

## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.


அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களை குறிவைத்து வேட்டை

## சர்வதேச ரீதியில் அதியுச்ச தண்டனை



47

நீதிக்கான நெடும்பயணம்





*(சென்றவாரத் தொடர்ச்சி)*

சர்வதேசரீதியில் ஒரு பத்திகையாளருக்கு ஒரு கட்டுரைக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டவிடத்து 20 வருடசிறைத்தண்டனை வழங்கப்பட்ட வழக்கு இந்த வழக்கு ஒன்றாகத்தானிருக்கும். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமல், இனங்களுக்கிடையில் குரோதத்தை ஏற்படுத்திய கட்டுரையை எழுதியுள்ளார் என பயங்கரவாதத் தடைச்சட்டப் பிரிவின் அடிப்படையில் மட்டும் குற்றச்சாட்டை சுமத்தியிருந்ததால் திஸநாயகத்திற்கு எதிராக ஒரேயொரு குற்றச்சாட்டை மட்டுமே சுமத்தியிருக்கமுடியும். மற்றைய 3 குற்றச்சாட்டுகளையும் நிரூபித்திருக்கமுடியாது. இதனாலேயே இனங்களுக்கிடையே குரோதத்தைத் தூண்டும் வகையில் கட்டுரை வரைந்தமைக்கு மட்டும் குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யாமல் நிதி சேகரித்தமை, சதி செய்தமைபோன்ற குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டு அந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்காக குற்றஒப்புதல் வாக்குமூலம் பயன்படுத்தப்பட்டது.

அதேபோன்று குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் மற்றைய சாட்சிகளின் அடிப்படையிலும் வழக்குத் தாக்கல் செய்தபடியால் யசிகரனுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. கட்டுரையைப் பிரசுரித்ததற்காக மட்டும் எனில் ஒரே ஒரு குற்றச்சாட்டு அடங்கிய குற்றப்பத்திரம் மட்டுமே தாக்கல் செய்திருக்கமுடியும். கட்டுரையை வரைந்த திஸநாயகத்திற்கும் அதனைப் பிரசுரித்த யசிகரனுக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரிவின் படி தண்டனை விதிக்கக்கூடிய குற்றச்சாட்டைப் புரிந்துள்ளனர் என்று மட்டும் குற்றப்பத்திரிகையினைத் தாக்கல் செய்வதாயின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அவசியப்பட்டிருக்காது. இருவரும் தண்டிக்கப்பட்டிருக்கலாம். அல்லது விடுதலை செய்யப்பட்டிருக்கலாம்.

North Eastern Monthly பத்திரிகையில் கட்டுரை வரைந்தது திஸநாயகம். அதனைப் பிரசுரித்தது யசிகரன் என்பதை நிரூபிப்பதற்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அவசியமில்லாதது. கட்டுரை வரைந்ததையும் அதனை பிரசுரித்ததையும் இருவரும் மறுத்திருக்கவும் முடியாது. ஆனால் பத்திரிகையில் வெளியான கட்டுரை இனக்குரோதத்தைத் தூண்டும் விதத்தில் எழுதப்பட்டதா? இல்லையா? என்பது சாட்சியங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படவேண்டியதொன்றாகும். இனக்குரோதத்தைத் தூண்டும் வகையில் அந்தக்குறிப்பிட்ட கட்டுரை எழுதப்படவில்லை என்பதை நீதிமன்றுக்குத் தெளிவுபடுத்தும் வகையில், பல பொறுப்பு வாய்ந்தவர்களும், சமூகத்தில் நல்ல மதிப்புடையர்களும் சுயாதீனமாக நீதிமன்றில் திஸநாயகத்திற்கு சார்பாக சாட்சியம் அளித்தபோதிலும் அவையெதுவுமே நீதியின் காதில் விழவில்லை.

திஸநாயகத்தின் கையினாலேயே பொலிஸாருக்கு எழுதிக்கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் திஸநாயகத்தினால் சுயமாகவே பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கப்பட்டுள்ளது என நீதிபதி கட்டளை வழங்கிய பின்னர் திஸநாயகம் பத்திரிகைக்கு கொடுத்த அறிக்கையில் தன்னை விடுதலை செய்வதாக பொலிஸார் தனக்கு வாக்குறுதி அளித்ததனால்தான் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கியதாகக் குறிப்பிட்டிருந்தார். அவரை விடுதலை செய்வதாக வாக்குறுதி கொடுத்து குற்ற ஒப்புதல் வாக்கமூலத்தை பதிவுசெய்துகொண்ட பொலிஸார் கொடுத்த வாக்குறுதியின்படி தம்மை விடுதலை செய்யாமல் தமக்கு எதிராக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அரசியற் கைதிகளில் பெரும்பான்மையானோர் பொலிஸாரின் தூண்டுதல்களையும் வாக்குறுதிகளையும் நம்பி குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை தமது தாய்மொழியான தமிழ் மொழியிலேயே எழுதிக்கொடுத்துள்ளதுடன் ஏற்கனவே பொலிஸாரினால் தயாரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எனக் கூறப்படும் ஆவணங்களிலும் தம்மை விடுதலை செய்துவிடுவார்கள் என்ற அதீத நம்பிக்கையில் கையெழுத்தும் வைத்துள்ளனர். பொலிஸ் நிலையங்களில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளை நீதிமன்ற உத்தரவையடுத்து சிறைச்சாலைக்கு மாற்றிய பின்பே நீதிபதிக்கு எந்தவித அச்சமுமின்றி தாங்கள் தாக்கப்பட்ட துன்புறுத்தப்பட்ட விடயத்தை அல்லது சுயவிருப்பமின்றி பலவந்தமாக வாக்குமூலத்தை பொலிஸார் பெற்றனர் என நீதிபதிக்கு முறையிடும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால் பல அரசியற்கைதிகள் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுப்புக்காவலில் இருக்கையில் தமக்கு நேர்ந்த இன்னல்களையும் தம்மிடம் எந்தச் சூழ்நிலையில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்பதனையும் பொலிஸாரின் வாக்குறுதிகளை நம்பியும் நீதிபதிக்கு முறையிட்டால் பொலிஸார் தம்மை சித்திரவதைக்கு உட்படுத்துவார்கள் என்ற காரணங்களினாலும் தமது சட்டத்தரணிகளுக்கே நடந்தவற்றை முற்றாகக் கூறாமல் தவிர்த்து விடுகின்றனர் அதனால் கைதிகள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகும் சட்டத்தரணிகள் எந்த முறைப்பாட்டையும் நீதிபதிகளுக்கு முறையிடும் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுகின்றன. பொதுவாக நீதிமன்றம் எதிர்பார்ப்பது யாதெனில் கைதியொருவர் தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் பொலிஸாரின் கட்டுப்பாட்டிலிருக்கும் வேளையில் பொலிஸாரால் நீதிமன்றுக்கு முதன் முதலாக அழைத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் கைதி ஏதாவது முறைப்பாட்டை நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவர எண்ணியிருந்தால், அந்த முறைப்பாட்டைத் தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே நீதிபதிக்கு முறையிடவேண்டும்.

மேல்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தபின் அந்த விசாரணையின்போது 'சுயமாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. அச்சுறுத்தி அல்லது தூண்டுதல் மூலமே பெறப்பட்டது' என சந்தேகநபர்கள் நீதிமன்றில் சாட்சியம் அளித்தாலும் அதன் நம்பகத்தன்மை கேள்விக்குரியதாகவே காணப்படும். திஸநாயகம் மட்டுமல்ல எத்தனையோ கைதிகள், தமது வழக்கு விசாரணைக்கு வந்த பிறகே தம்மிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எந்தச் சூழ்நிலையில் பெறப்பட்டது என்பதைக் கூறுகின்றனர். கிணற்றில் விழுந்தவன் எப்படியும் வெளியே வரத்தான் முயற்சிப்பான். தான் பிடித்துக்கொண்டு கிணற்றிலிருந்து மேலே வரத் தனக்குக் கொடுக்கப்பட்டது கயிறா அல்லது பாம்பா என்பதைக் கவனிக்கும் நிலையில் பாதிக்கப்பட்டவரின் மனநிலை காணப்படமாட்டாது. வாக்குறுதி தூண்டுதல் அல்லது துன்புறுத்தல் காரணமாகவே அந்த அடிப்படையிலேயே தன்னிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக முதல் சந்தர்ப்பத்தில் நீதவானிடம் கூறப்படாமல் விட்டதற்காக திஸநாயகத்தை குறை கூறமுடியாது. ஏனெனில் தனக்குப் பொலிஸ் கொடுத்த வாக்குறுதி, தூண்டுதல் இரண்டையும் எந்தக் கைதியும் நம்பும் சூழ்நிலையே பொலிஸாரின் கட்டுக்காவலிலிருக்கும்பொழுது ஏற்பட வாய்ப்புண்டு.

திஸநாயகத்திற்கு 20 வருட தண்டனை வழங்கியாகிவிட்டது. யசிகரன், வளர்மதியின் வழக்கின் முடிவு என்ன நிலையில் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு நாள் குறிக்கப்பட்டு விட்டது. அதேவேளையில் யசிகரன் மேல்நீதிமன்றத்தில் பொலிஸார் தன்னைத் தாக்கிக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர் என்பதை மிகத் தெளிவாக சாட்சியமளித்துவிட்டார். அரச தரப்புச் சட்டத்தரணி எத்தனையோ குறுக்குக் கேள்விகளை (Cross Examination) யசிகரனிடம் கேட்டபொழுதிலும் அவரின் சாட்சியத்தில் எந்த முரண்பாட்டையும் காணமுடியவில்லை. அடுத்ததாக யசிகரனைப் பரிசோதனை செய்த சட்ட மருத்துவ அதிகாரியின் சாட்சியத்துக்காக யசிகரன் சார்பில் நீதிமன்றில் ஆஜராக திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

இதில் முக்கியமான விடயம் யாதெனில் யசிகரன் சார்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மூன்று பிரிவுகளின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சட்டமுறையற்ற கைது, சட்டமுறையற்ற தடுப்புக்காவல், சித்திரவதை செய்யப்பட்டமை என்பனவே அந்த மூன்று குற்றச்சாட்டுகளும். கைது செய்து தடுத்துவைக்கப்பட்டவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் பொழுது கைதும், தடுத்துவைப்பும் சட்டரீதியானதென உயர் நீதிமன்றத்தில் நியாயப்படுத்தப்படுகின்றன. ஆனால் சட்ட மருத்துவ அதிகாரிகளின் மருத்துவச் சான்றின்படி யசிகரன் பொலிஸ் கட்டுக்காப்பில் இருந்த காலத்தில் தாக்கப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பதை நிரூபிக்க இந்த இரண்டு சட்ட மருத்துவ அறிக்கைகளும் போதுமானதாகின்றன. 'குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பொலிஸார் சுயவிருப்பமின்றி பலாத்காரமாக தன்னைத் தாக்கி சித்திரவதை செய்தே பெற்றனர்' என பின்விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே யசிகரன் மனத்துணிவுடன் நீதிபதிக்கு முறையிட்டமை, சட்டமருத்துவ அதிகாரிகளின் சட்ட மருத்துவ அறிக்கைகள் பெறப்பட்டமை, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமை போன்ற விடயங்களே யசிகரன், வளர்மதியின் விடுதலைக்கு முக்கியமான காரணங்களாக அமைந்தன.

### திஸநாயகம் பிணையில் விடுதலை

திஸநாயகம், யசிகரன், வளர்மதிக்கு ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், சர்வதேசரீதியாக கவனத்தை ஈர்த்த வழக்குகளாகும். மேலும் மூத்த பத்திரிகையாளர் திஸநாயகத்திற்கு 20 வருட தண்டனை வழங்கியது சர்வதேசரீதியில் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. இதேவேளையில் மேல் நீதிமன்றத்தினால் 20 வருட தண்டனை விதிக்கப்பட்ட ஊடகவியலாளர் திஸநாயகம் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக 2009.11.15ஆம் திகதி அவரது சட்டத்தரணிகள் மூலமாக மேன்முறையீடு செய்தார். அத்துடன் பிணை மனுவொன்றையும் தாக்கல் செய்திருந்தார். திஸநாயகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு 2010.01.11ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபர் பிணை மனுவுக்கு ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கியது.

### திஸநாயகம் பொதுமன்னிப்பில் விடுதலை

திஸநாயகத்துக்கு 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி 20 வருட சிறைத் தண்டனை நீதிமன்றால் கொடுக்கப்பட்ட பின்னர் அவரை பொதுமன்னிப்பில் விடும்படி பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் உலக ஊடக சுதந்திரதினமான (World Press Freeedom Day) 2010.05.03 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் அவருக்கு பொது மன்னிப்புவழங்கப்பட்டது. ஊடகவியலாளர் திஸநாயகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஊடக ஆலோசகராகவும் கடமையாற்றியவர்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டு ,விசாரணைகள் முடிவடைந்து சட்டமா அதிபரினால் மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ,தண்டனை வழங்கப்பட்ட தமிழ் அரசியற் கைதிகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்ட ஒரே கைதி திஸநாயகம் மட்டுமே. விடுதலையின் பின்னர் அவர் அமெரிக்காவில் வசிக்கின்றார்.

### யசிகரனுக்கும்; வளர்மதியும் சுவிஸில்!

யசிகரன் வளர்மதி இருவருக்கும் சுவிற்சர்லாந்து நாடு அகதி அந்தஸ்து வழங்கியது அதே வேளையில் தனிப்பட்ட உடமைகளை அரசுடமையாக்கியமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குதொடர்ந்து திகதி குறிப்பிடப்பட்டு தற்போதும் அந்த வழக்கு முடிவடையவில்லை.


கூறவேண்டிய விடயத்தை கூறவேண்டிய இடத்திலும் செய்ய வேண்டியதைச் செய்யவேண்டிய நேரத்திலும் செய்யாதுவிடின் விளைவுகளைச் சந்திக்க வேண்டியேவரும் அமைதி பொன் போன்றது. அமைதியாக இருக்கவேண்டிய நேரங்களும் உண்டு என்பதில் எந்தமாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது எனினும் அமைதி எல்லாச் சூழ்நிலையிலும் உதவி செய்யாது. அவசியமான தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் சந்தர்ப்பம் கிடைக்கும் போது பேசாமடந்தையாக இருப்பது. அதனைத் தவிர்ப்பது சந்தர்ப்பத்தை நழுவ விடுவது. சிலவேளைகளில் வாழ்கையில் பல சோதனைகளை சந்திக்க வைத்துவிடும். தண்டனையையும் வழங்கிவிடும்.

*(அடுத்த வழக்கு அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
20 ஏப்ரல் 2025

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்



01

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சித்திட்ட தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை.

**1.1 அறிமுகம்**

மனிதன் எனும் விலங்கினை வளப்படுத்தி, வசப்படுத்தி சமூகத்தின் ஓர் அங்கமாக அமைவுறுத்தி சிந்தித்துச் செயற்பட வைக்க சமயமும் சமய நெறிமுறைகளும் வழிவகுக்கின்றன. ஒரு புறம் இறையிருப்புக் குறித்த வினாக்களும், விமார்சனங்க ளும் ஆதிக்கம் செலுத்துகின்ற வேளையில் மறுபுறம் மதம் குறித்த அறிவியல் பூர்வமான ஆய்வுகளின் வழியான கருத்துகளும், கோட்பாட்டு ஆஸ்திகனின் வாழ்வியலுக்கு ஆதாரமாகின்றன. தாமஸ் வில்லியம் ரைஸ் என்ற பிரித்தானியா வைச் சேர்ந்தவரும் பாளி மொழி நிபுணரும் சமயங்கள் எல்லாம் அன்பு, அறம், வாழ்வியல், ஒழுக்கம் போன்றவற்றினையே போதிக்கின்றன என்கிறார். ஆனால் அவற்றினை அடைவதற்கான வழிமுறைகள் மதங்களுக்கிடையே வேறுபாடு கொண்டவையாகக் காணப்படுகின்றன எனவும் குறிப்பிடுகின்றார்.

உலகில் வாழ்கின்ற மக்கள் தமது ஆத்ம ஈடேற்றத்தின் பொருட்டு பல்வேறுபட்ட மதங்களினைப் பின்பற்றுகின்றனர். வைணவர்களினால் மகாவிஸ்ணுவின் ஒன்பதாவது அவதாரம் எனக் கருதப்படும் கௌதமபுத்தர் கி.மு 563ஆம் ஆண்டு காலப்பகுதியில் தற்போதைய நேபாளத்தில் உள்ள "லும்பினி மாநிலத்தில்" கபிலவஸ்து எனும் இடத்தில் அவதரித்தார்.(Almond>1986 & Upham> 18-29).

புத்தரின் போதனைகளினைப் பின்பற்றுபவர்களினை பௌத்தர்கள் எனவும் அவர்களின் போதனைகளின் பிரகாரம் செய்யும் சடங்குகளினையும் போதனையையும் பௌத்தமதம் என்றும் அழைத்தனர். கௌதமரின் போதனைகளும் தத்துவங்களும் மதம் என்ற எல்லையினைக் கடந்து உயரிய தத்துவங்களாக அறிஞர்களினால் நோக்கப்படுகின்றன. அவை நோக்கப்படவேண்டியவையும்கூட. அந்தவகையில் நைங்டேவிட் என்ற அறிஞர் புத்தபகவானைப் பற்றிக் குறிப்பிடுகையில், கௌதமர் இந்துவாகவே பிறந்து இந்துவாகவே வாழ்ந்து இந்துவாகவே இறந்தார் என்கின்றார். இதன் மூலம் இந்து மதத்துக்கும் பௌத்த சிந்தனைகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் இடையே உள்ள சித்தாந்த ரீதியான, கொள்கை ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான தொடர்பினை உணர்ந்துகொள்ளலாம். (Varma> 2018)

பிரபஞ்சம் எல்லாம் மாயை என்ற கருத்தியலின் பிரதிபலிப்பான சங்கரரின் மாயாவாதக் கொள்கையானது பௌத்த சித்தாந்தங்களின் அடிப்படையிலேயே தோற்றம்பெற்றது என இராமானுசர், மத்துவர் போன்றோர் குறிப்பிட்டதுடன் மாயாவாதக் கொள்கையை "பிரசன்ன பௌத்தம்" எனவும் அழைத்தனர். (நாராயணஸ்வாமி, 2001).

சார்வபள்ளி இராதாகிருஷ்ணன் பௌத்தம் முற்றிலும் புதுமையான அல்லது புதிய கோட்பாடு அல்லவென்றும் மேலும் இந்திய மெய்யியலில் சிந்தனைகளின் பரிணாம வளர்ச்சியில் ஒரு விசித்திரமான கருத்துருவாக்கமும் அல்ல என்றும் குறிப்பிட்டதுடன் கௌதமர் ஒரு புதிய கண்டுபிடிப்பாளரோ, புதியன புனைபவரோ அல்ல. மாறாக கடந்தகாலத்தின் தொடர்ச்சியாக செயற்பட்டவர் எனக் குறிப்பிட்டார். மேலும் இராதாகிருஷ்ணன் பௌத்தம், இந்துசமயத்தின் புறசமயமொன்றாகும் என்கின்ற கருத்துடன் உடன்பட்டவர். (Ito> 1964). இந்துசமயத்தின் முக்கியமான மரபு சார்ந்த அமைப்புகளான நியாயம், யோகம், வைசேசிகம் போன்றவையும் வேதாந்தங்கள், உபநிடதங்கள் என்பவையும் ஆத்மா (ஆன்மா)வின் இருப்பினையும் இருப்புப் பற்றிய கருத்துகளினையும் ஏற்றுக்கொள்கின்றன. ஆனால், பௌத்த மதம் ஆன்மா குறித்த இந்துமதத்தின் கருத்தில் இருந்து முழுமையாக வேறுபடுகின்றது. பௌத்த சித்தாந்தங்களின்படி ஆன்மா என்பது ஒழுக்கநெறிப்படி வாழ்தல் ஆகும். புத்தபகவான் வாழ்வியலுக்குத் தேவையான சிறந்த ஒழுக்க அடிப்படையை அமைத்துக் கொடுத்தலையே நோக்கமாகக் கொண்டிருந்தார். மேலும் ஒழுக்கமே கடவுள் என்றும் ஒழுக்கம் கடவுள் அன்றியும் நீடித்துநிற்கக் கூடியதொன்றாகும் என்கின்றார். கடவுளின் இருப்புக் குறித்து பல்வேறு ஐயப்பாடான வினாக்களினைக் கொண்டிருந்ததினால் புத்தரை நாத்திகன் என்றும் அழைப்பார்.

என் பார்வையில் புத்தரை நாத்திகன் என்று அழைப்பது பொருத்தப்பாடுடையது அல்ல. ஏனெனில் புத்தர் ஒழுக்கமே கடவுள் என்ற புதிய அர்த்தத்தினைக் கொடுத்துள்ளர். ஒழுக்கமாக உணர்வுகள் மேலோங்கி உன்னதமான வாழ்க்கையை வாழ நாம் ஏன் இறைவனை நம்பவேண்டும்? நாம் தன்னளவிலேயே ஒழுக்கத்தில் நிலைத்திருப்பதற்கான தாராண்மிய உணர்வுகளுடன் வாழ்ந்திடவேண்டும் என்ற பகுத்தறிவு ரீதியான எண்ணங்களினை பௌத்தம் வெளிப்படுத்துகின்றது. அதேவேளை இந்துசமயத் தத்துவங்களில் ஆன்மா குறித்த கருத்துகள் முதன்மை வாய்ந்தனவாகவுள்ளன போல் மேற்கத்தேய கிரேக்க மெய்யியலாளரான அரிஸ்டாட்டில் உடலின் முதல் இயல்பு நிலை ஆன்மா என்கின்றார். கௌதமர் இந்துமதத்தின் ஆன்மா குறித்த கருத்துகளான ஆன்மா உண்டு, அழிவற்றது, சாசுவதமானது என்கின்ற கருத்துகளுடன் உடன்பாடற்றவராக இருந்ததுடன் ஆன்ம விடுதலையை இப்பிறவியிலேயே "பிரத்தய சமுத்வாத" என்ற அளவை வழியாக ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற சிந்தனை புத்தபகவானின் போதனைகளில் விஞ்சி நிற்கின்றது. எனினும் அவர் இந்துமதம் கூறுகின்ற கர்மாவினை ஏற்றுக்கொள்ளுகின்றார். அதேவேளை இந்துசமயத்தில் காணப்பட்ட கிரியைகள், வேள்விகள், உயிர்களினைப் பலிகொடுப்பதுடன் தொடர்புடைய யாகங்கள் குறிப்பாக அசுவமேதம் (அரசர்கள் தங்களினை சக்கரவர்த்திகளாகப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்கென செய்யப்படும் யாகம்) நரமேதம் (மாந்தரைக்கொண்டு செய்யும் வேள்வி) வாஜபேயம் போன்றவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. இவையாவும் உயிர் பலியோடு தொடர்புபடுகின்றமையினால் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் கௌதமர் சமய வழியான இந்துமத ஆன்மீகக் கருத்தியல்களினை ஏற்றுக்கொண்டார். இந்துசமயம் மறுபிறப்புக் குறித்த உறுதியான நம்பிக்கையினைக் கொண்டுள்ளது. ஆனால் பௌத்தம் மறுபிறப்புப் பற்றி எண்ணுவதே தவறு என வலியுறுத்துகின்றது. இதற்கு தம்மபதத்தில் உலகவியல் (167) என்ற அதிகாரத்தில் "உலகத் தொடர்பை வளர்த்துக்கொள்பவனாக இராதே" என்ற கூற்று சான்றுபகர்கின்றது. அதாவது மீண்டும் மீண்டும் இவ்வுலகில் வந்து பிறக்க விரும்புதலும் அதனை அடைந்துகொள்ள செய்கின்ற செயல்களும் தவறான செயல் என்கின்றார் கௌதமர். மந்திர தந்திரங்களில் உடன்பாடற்ற புத்தபகவான் சித்துப் பெற்ற மானிடர்கள் நன்மறைகளினை நன்கு கற்று அறிந்ததனால் பேராற்றல்கள் நிறைந்தவர்களாக விளங்குகின்றார்கள், அவ்வாறு அவர்கள் பேராற்றல் கொண்டமையினால்தான் இதனைச் செய்கின்றார்களேயொழிய அவர்கள் மந்திரவாதிகள் அல்லர் என கௌதமர் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் சித்தினை ஏற்றுக்கொள்ளுவது புலப்படுகின்றது. (கலியாணசுந்தரம் 2025)

(தொடரும்)

---

பாகம் 3

இராகவன்

புனிதவதி ரீச்சர் மூலமாகத்தான் எனக்குக் குந்தவையுடன் நேரடிப்பழக்கம் ஏற்பட்டதெண்டு போனகிழமை சொல்லியிருந்தனான். குந்தவையைப் பற்றி ஏற்கனவே சண்முகன் எனக்கு அவ்வப்போது அவரோட கதைக்கேக்குள்ள நிறையச் சொல்லியிருக்கிறார். ஆனந்தவிகடன் முத்திரைக் கதைகளை வெளியிட்டுவந்த காலத்தில் அதில் குந்தவையின் சிறுகதையும் வெளியாகியிருந்ததென்பது முக்கியமான தகவல். "யோகம் இருக்கிறது" என்ற சிறுகதையை குந்தவை எழுதிய பின்னணிச் சம்பவத்தையும் சண்முகன்தான் எனக்குச் சொல்லியிருக்கிறார்.

ஒரு தடவை நான் சண்முகனுடன் குந்தவையின் வீட்டுக்கு கட்டைவேலி யூனியன் ஓட்டோவில் 2003 காலப் பகுதியில் சென்றிருக்கிறேன். அப்போது குந்தவை தமிழகத்திலிருந்துவிட்டுத் தாயகம் திரும்பியிருந்தார். அவர் தமிழ் நாட்டிலிருந்தபோது எஸ்.பொ.வின் மித்ர பதிப்பக வெளியீடாக,"யோகம் இருக்கிறது" எனும் அவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு வெளிவந்து அதற்கான வெளியீட்டு விழா சென்னையில் நடந்திருந்தது. அவ்வெளியீட்டு விழா எஸ்.பொ. தலைமையில் வெங்கட்சாமிநாதன், ஜெயமோகன் ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்த சிறப்பாக நிகழ்ந்து முடிந்தது. அவ்வெளியீட்டு விழாவின் ஒளிப்பதிவையும் நான் பார்த்திருந்தேன். தாயகம் திரும்பியிருந்த குந்தவை தனது "யோகம் இருக்கிறது" சிறுகதைத் தொகுப்பின் அறிமுக விழாவை இங்கே ஏற்பாடு செய்து நடத்த விரும்பி, சண்முகனைப் புனிதவதி ரீச்சரூடாக அணுகினார்.

25

அந்தக்காலகட்டத்தில் கட்டைவேலி நெல்லியடி கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம் என்ற அமைப்பினூடாகப் பல்வேறு கலை இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்துவந்தார். அப்போது எனக்கு சண்முகனோடு இருந்த நட்பும் நெருக்கமும் தலைவருடனுமிருந்தது. சண்முகனைப் போன்றே நான் ஒவ்வொருநாளும் தலைவரையும் சந்தித்துக் கதைப்பது வழக்கமாக இருந்தது. இந்த அடிப்படையில் சண்முகன் என்னிடம் குந்தவையின்,"யோகம் இருக்கிறது" சிறுகதைத் தொகுப்பின் அறிமுகவிழாவை கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தினூடாக நடத்துவது குறித்துக் கதைத்து ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டார். நானும் தலைவருடன் கதைத்தேன். அவரும் மிகுந்த சந்தோசத்துடன் அவ்வறிமுகவிழாவை நடத்தச் சம்மதித்தார். இதற்காகத்தான் கட்டைவேலி யூனியன் ஓட்டோவில் நானும் சண்முகனும் யூனியன் தலைவரும் தொண்டைமானாற்றிலிருக்கும் குந்தவையின் வீட்டுக்குப் போயிருந்தோம்.


குந்தவை, புத்தகங்கள் சஞ்சிகைகளுக்கு நடுவே அமர்ந்திருந்தார். அவரைப் புத்தகங்களுடன் வாழ்பவர் என்றுதான் சொல்லவேண்டும். நான் குந்தவையை ஒரு நேர்காணல் செய்து அது கலைமுகத்தில் வெளியானது. அதில் இடம்பெற்ற அவரது ஒளிப்படங்கள் ஒவ்வொன்றுமே தனித்துவமானவை. குந்தவை எனக்கு அவ்வப்போது சில கடிதங்கள் எழுதியிருக்கிறார். வழமையான கடிதங்களிலிருந்து அவை வேறுபட்டு ஒரு கவித்துவமான தன்மையுடன் வாசிக்க வாசிக்க அலாதியாக இருக்கும். குந்தவையின் "யோகம் இருக்கிறது" சிறுகதைத் தொகுப்பின் அறிமுகவிழா தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் சிறப்பாக நடந்துமுடிந்தது. சண்முகன், புனிதவதி ரீச்சர், கல்யாணி ரீச்சர் ஆகியோருடன் நானும் அந்த நிகழ்வில் உரையாற்றியிருந்தேன். நிகழ்வின் முடிவில் குந்தவை என்னைப் பார்த்து, 'நீங்கள் ஒரு அன்ரி எல்ரீரீயா? 'எனக்கேட்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் என்னத்தைப் படிக்க?

○ சி. உருத்திரலிங்கம்



எமது கல்வியின் தராதரம் குறைந்துபோவதாகவும் அதனை மேன்மை அடையச்செய்யவேண்டுமெனவும் பலர் குரல்எழுப்பி ஒருவிதத்தில் விழிப்புணர்வினைத் தோற்றுவித்தாலும் அவையாவும் பத்திரிகைகளுக்குத் தீனி போட்டதாகவே அமையும். குலைக்கிற நாய் கடிக்குமோ? அதே மாதிரித்தான் இங்கும். செயற்றிறன் மிக்கவர்களாக ஒருவரும் தென்படவில்லை போலும்.


எல்லாரும் கேள்வியின் நாயகர்கள்தான்! எமக்கும் பழக்கப்பட்ட விடயமாகிவிட்டது. அடிப்படைக் கல்வி மாற்றங்களில் பிரதம மந்திரி அம்மையார் கவனம் எடுப்பதாக அறிய நேர்ந்தமையினால் நாம் இங்கு அதனை ஓரம் கட்டிவிட்டு சில காலத்திற்கு முன்னராக ஆளுநர் தனியார் நிறுவனமொன்றின் கல்விக் கண்காட்சித் திறப்பு விழா ஒன்றில் கூறிய கருத்துகளைக் கவனத்திலெடுப்போமாக!

வடக்கு மாகாணத்தில் பாடசாலை இடைவிலகல் எண்ணிக்கை 175 ஆக இருக்கையில் இவற்றினை நாம் தடுக்கவேண்டுமென அவர் கூறியிருந்தாலும் அதற்கான பரிகாரமென்ன எனக்கூறியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்காதோ? அப்படிக் கூறியிருந்தால் அக்கல்விக் கண்காட்சியின் உள்நோக்கம் பாதிக்கப்படலாம் என நினைத்தார் போலும்! 1992ஆம் ஆண்டளவில் யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறையைச் சேர்ந்த அமரர் மருத்துவக் கலாநிதி சிவராஜா, தொழில் வழிகாட்டல் முறையினை எம் மாணவர்களுக்கு முதன்முறையாக அறிமுகப்படுத்த ஆரம்பித்தாலும் அக்காலத்தில் யாழ். றோட்டரிக் கழகம் அவர்தம் ஆலோசனையின் அடிப்படையில் ஒரு சிறிய கையேட்டினை உடனடியாக வெளியிட்டு ஒரு குறிக்கப்பட்ட தொழிலுக்கன்றி நாட்டில் அப்போதைய வேலைவாய்ப்புகளின் நிலவரத்தின் பிரகாரம் மாணவர்கள் தமது தொழிலைத் தீர்மானிப்பதற்கான பாதைகளினை எவ்வாறு நோக்கவேண்டுமென சகல வழிகளையும் உள்ளடக்கியதான வழிகாட்டி மூலம் அறியத்தந்திருந்தார்கள். இது சரித்திரம்.

அதனடிப்படையில் 1993, 1994 ஆம் ஆண்டளவில் அந்த றோட்டரிக்கழக உறுப்பினர் ஒருவர் தானாகவே முன்வந்து வடமாகாணத்திலுள்ள பெரிய பாடசாலைகளான சென்.ஜோன்ஸ் கல்லூரி, ஹாட்லி கல்லூரி, மகாஜனக் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களின் வேண்டுகோளுக்கிணங்க

தொழில் வழிகாட்டல் முறையினை மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்திச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தார்கள். உதாரணத்திற்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவியொருவர் தனது சிநேகிதிகள் நான்கு பேருக்கும் மருத்துவத் துறைக்கு அனுமதி கிடைத்ததால் தனக்குக் கிடைக்கவில்லையே என மனமுடைந்து றோட்டரிக்கழகத்தினை நாடியபோது அவர்கள் தம் ஆலோசனையின் பேரில் மனந்தளராமல் உடனடியாக கொழும்பிலுள்ள College of Chemistryக்கு Chemist ஆகப் படிப்பதற்கு விண்ணப்பித்து நான்கு வருட முடிவில் தனது சக மாணவிகளுக்கு முன்பாகப் பட்டம் பெற்று அவர்களிலும் பார்க்கக்கூடிய சம்பளத்தினைப் பெற்ற அம்மாணவியின் சந்தோஷத்தினை என்னவென்று சொல்வது!!!

அதன்பிற்பாடு இடப்பெயர்வினால் சகல முயற்சிகளும் பாதிக்கப்பட்டு அவற்றின் வளவளாராக இருந்தவர் வன்னிப் பிரதேசத்திலேயே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபடியால் யாவும் ஸ்தம்பித நிலைக்கு உள்ளாகிவிட்டன. 2002ஆம் ஆண்டிற்கு பின்னராக தொழில் வழிகாட்டலின் அவசியத்தை உணர்ந்து சில தனியார் நிறுவனங்கள் தத்தம் பொருளாதார நன்மையினை உள் நோக்காகக் கொண்டு தத்தம் சிறப்புத் தொழிலுக்கேற்றவாறு நடத்த முன்வந்தாலும் மாணவர்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையவில்லை. எனினும் வழிகாட்டல் என்னும் சொற்றொடர் பரவலாக சகல தனியார் கல்வி நிறுவனங்களாலும் பாவிக்கப்பட்டு தொடர்கதையாக இன்றும் விளங்குவதை அவதானிக்கலாம். உதாரணமாக ஒரு மருத்துவர் தனது மருத்துவமனைக்கு அருகே மருந்தகம் அமைத்திருந்தால் அவ்விடயம் எவ்விதம் சந்தேகங்கள் தோன்ற வாயப்பளிக்கிறதோ அதே மாதிரித்தான் தனியார் கல்வி நிறுவனங்கள் முன்வரும்போது தமது வரையறைக்குட்பட்ட தொழில் வழிகாட்டலைக் கொண்டு செல்லலாமேயொழிய மாணவர்கள் தேடும் சிறந்த வழிகாட்டலை வழங்கமுடியாது என்பதனை மறுக்கவே முடியாது. தொழில் வழிகாட்டலானது பனைமரத்தினைப் போல ஒரு வழிப்பயணத்திற்கு அடிகோலாமல் மாமரம் போல பல கிளைகளிலான வழிப்பயணத்திற்கு வழிகாட்டினால் எம் மாணவர்கள் பயனடையமாட்டார்களா? ஒன்றில் சறுக்கினாலும் மற்றைய கொப்பில் ஏறி முன்னேறலாம் அல்லவா? செய்யவேண்டியதெல்லாம் ஒன்றுதான். தன்னலம் கருதாமல் சேவை மனப்பான்மையுடன் ஒவ்வொரு துறையிலும் யாரும் இருப்பின் அவர்களை எல்லாம் ஒன்றுசேர்த்து தனது ஆளுமையின் கீழ் ஆளுநர் முன்வந்தால் அவர் கற்ற பாடசாலைக்கும் பெருமை, பிறந்த ஊருக்கும்தான் பெருமை. அவர் முன்வருவாரா? இனி பரிகாரத்திற்கு வருவோம்! மேலிருந்து கீழே நோக்குவோமானால் சர்வகலாசாலையின் அறிவு இதற்குச் சரிவரமாட்டாது. அவர்கள் அறிவில் ஆதவர்கள். அவர்களும் 1994 ஆம் ஆண்டளவில் முயற்சி செய்திருந்தாலும் அவர்களது வழிகாட்டல் தமது வளாகத்திற்குள்ளேயே அமைந்திருந்தது. ஆனால் சேர்ந்து வழிகாட்ட மிகவும் பயன்படலாம். அடுத்த தெரிவு அரச அதிபர்தான்! ஆனால் அவர் உடனடியாக தனது ஆளுமைக்குட்பட்டதாக உள்ள அரச அதிகாரிகளைக் கூட்டுவார், பேசுவார். அரச அதிகாரிகள்தான் என்ன செய்வர்? இதில் தமக்கு என்ன பலாபலன் என சிலர் யோசிக்கலாம். ஆனால் இவருக்கோ தனியார் நிறுவனங்களை அழைப்பதற்கு அதிகாரம் இல்லை போல்தான் தெரிகிறது. ஆகவே பலன் பூஜ்ஜியமாகவே அமையலாம்! முன்னர் போல றோட்டரிக்கழகம் அல்லது லயன்ஸ் கழகம் முன்வந்தால் அவர்களுக்கான சகல உதவிகளையும் வழங்க யாழ். மண்ணில் உலர் உணவுகள் வழங்காத ஓர் அரசசார்பற்ற நிறுவனம் காத்திருக்கிறது. ஆனால் அவர்கள் முன்வருவார்களா! பலவித தொழிற்றுறைகளைச் சார்ந்த வல்லமைபெற்ற புத்திஜீவிகளை இனங்கண்டு அவரவர் தத்தம் வழிகாட்டல்களை வழங்க அவர்களை ஒன்றிணைத்து பாடசாலை அதிபர்களின் அனுமதியுடன் ஒரே மேடையில் மாணவர்களுக்குத் தீனியை வழங்கும்போது பகுத்தறிவு கொண்ட மாணவ சமுதாயம் அன்னப்பறவை போல் தனக்கேற்றதை தேர்ந்தெடுக்க மாட்டார்களோ!



# பட்சமுள்ள பிள்ளையானுக்கு...!



நாங்கள் சுகம். நீங்களும் சுகமாயிருக்கிறியள் எண்டு கம்மன்பில சொன்னவர். ஆனால் என்ன? இடைக்கிடை மனசில கிலேசப்படுறியளாம். பழையதை எல்லாம் நினைச்சு வெப்பியாரப்படுகிறியளாம். இடைக்கிடை கனவுகள் வந்து குழப்புறதாகவும் சொன்னனியளாம். அதிலையும் பிரபாகரன் வந்து கொடுப்புக்கை சிரிச்சு இப்ப எப்பிடி எண்டு கேட்டதைத்தான் தாங்கேலாமல் கிடக்கு எண்டு சொன்னனியளாம். என்ன இருந்தாலும் புதுவருஷம், ராகுகேது மாற்றம், வியாழ சுகம், சனிமாற்றம் எண்டு கிரகக் கழிவுகள் வரேக்கை உங்களுக்கு மட்டுமில்லை உங்கை கனபேருக்கு உப்பிடிச் சில்லெடுப்பாம் எண்டு கேள்வி.

நான் சின்னப்பிள்ளையா இருக்கேக்கை அப்பு அடிக்கடிச் சொல்லுறவர் "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" எண்டு. அப்ப நான் நினைச்சன் புகையிலைக் கண்டு நடமுன்னம் வடிவா எருப்போட்டு நிலத்தைச் சாறிக்கட்டி நட்டால் பிறகு அது வளர்ந்து நல்ல பெறுமதியா விக்கும். அதுக்குத்தான் அப்பு அப்பிடிச் சொன்னவர் எண்டு. ஆனால் இப்பதான் விளங்கிது நாங்கள் செய்யிற அட்டூழியம், அடாவடித்தனம், அட்டகாசம், துரோகம், ஏமாத்துவித்தை, பாதகம், கொலை, கொள்ளை எண்டு எல்லாம் ஒண்டு சேர்ந்து ஒரு நாள் கழுத்தை அறுக்கும் எண்டு. இப்பதான் எங்களுக்கு அப்புவின்ரை அனுபவ அறிவு எப்பிடி எண்டு தெரியிது.




நீங்கள் இராஜபக்சக்களின் உள்ளங்கவர் கள்ளனாக இருக்கேக்கை உங்கடை நண்பனா இருந்தவர் கம்மன்பில. அப்ப அந்தக் கம்மன்பிலவுக்குத் தெரியும் நீங்கள் என்ன செய்தனியள் எண்டு. உங்கடை உள்ளும் புறமும் அவருக்கு அத்துப்படி. இராஜபக்சக்களின்ரை ஆசை, அபிலாஷைகளை நிறைவேற்ற நீங்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்லை எண்டது அவருக்கு மாத்திரமில்லை ஊரறிஞ்ச விசயம். அதுக்கு ஆதாரமா இண்டைக்குப் பேப்பரிலை "பிள்ளையான் ஒரு தேசிய நாயகனே! அவரே புலிகளை வென்றார். கம்மன்பில கண்டுபிடிப்பு" எண்டொரு செய்தி. அதிலை அவர் மறைமுகமாக "சிங்களப் பேரினவாதியளைப் பொறுத்தவரை பிள்ளையார் ஒரு தேசிய வீரன் எண்டு கொண்டாடப்படவேண்டியவர்" எண்டு உங்களுக்காகப் பரிந்து பேசி இருக்கிறார். அது மட்டுமல்லாமல் நீங்கள் என்னவகைக் குற்றங்களைச் செய்திருந்தாலும் உங்களைத் தண்டிக்கப்பிடாது எண்டதுதான் அவற்றை பக்க நியாயம் போலை கிடக்கு.

சரி நீங்கள் புலிகளிலை இருந்து ஏதோ ஒரு தேவைக்குத்தான் பிரிஞ்சு வந்தனியள் எண்டது வெளிப்படை. ஒரு குழந்தையைக் கேட்டாலும் அது இதைத்தான் சொல்லும். வந்தனியள் காட்டிக்குடுத்தியள், ஆக்களைக் கடத்தினியள், கெடுத்தியள், கொண்டியள். உங்களாலை பாதிக்கப்பட்டவையின்ரை சாபம் உங்களை விடுமோ? அந்தக் காலகட்டத்திலை பின்னேரங்களிலை ஐஞ்சு நட்சத்திர ஹோட்டல்களிலை தடிச்ச நீட்டுச் சுருட்டோடை கருணா ஒரு பக்கம் ஆடின ஆட்டம் கொஞ்ச நஞ்சமில்லை. அதுக்கு நீங்களும் உடந்தை எல்லோ?

இராஜபக்சக்கள் காலம் உங்கடை பொற்காலம் எண்டுதான் சொன்னவை. ஜே.ஆர். சொன்னமாதிரி ஆம்பிளையைப் பொம்பிளையாவும், பொம்பிளையை ஆம்பிளையாவும் மாத்தமுடியாதே ஒழிய மற்ற எல்லா அதிகாரத்தையும் என்ரை புதிய சட்டவரைவாக்கம் கொண்டிருக்கிது எண்டு கொக்கரிச்சவற்றை செத்தவீட்டிலை நிண்டவை கொஞ்சப்பேர்தான் எண்டு கதைச்சவை. அவர் செய்தது சிங்கள மக்களுக்கான தியாகம் எண்டு சொன்னால் பல சிங்களச் சனம் தீக்குளிச்செல்லே இருக்க வேணும். அப்பிடி ஒண்டும் நடக்கேல்லையே.

அதைப்போலத்தான் உங்கடை தியாகமும். புலியளிலை இருந்து பிரிஞ்சு வந்தாப் பிறகு, நீங்களும் கருணாவும் எல்லாத்தையும் அனுபவிச்சுக் கழிச்சனீங்கள். அவர் ஒருக்கா லண்டனுக்குப் போய் அடியும் வாங்கிக்கொண்டு வந்தவர். அந்தக் காலத்திலை பஞ்சமா பாதகர்கள் எண்டு உங்களைச் சொன்னாலும் தகும். ரத்வத்தையின்ரை பெடியள், ராஜபக்சக்களின்ரை வாரிசுகள், அதுக்கு அடுத்தாப்போலை நீங்கள் இரண்டுபேரும் செய்த மன்மதலீலைகள்தான் உச்சம் எண்டும் கதைச்சவை. அப்பு சொன்னமாதிரி முற்பகல் செய்ததுக்கெல்லாம் இப்ப அனுபவிக்கிறியள், இன்னும் அனுபவிப்பியள்.

வாழ்க வளத்துடன்
இப்படிக்கு
**அப்பாவி அன்னமுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுநிலா

# போரின் கவிதை 8



கோபங்கள் கொந்தளிக்கும் வாலிபம்
பெற்றோரின் துன்பமறியா வீரியம்..
எதிர்காலம் பற்றிச் சிந்திக்கப்பிடிக்காத மூளை..
காதல்தான் வாழ்வின் முழு அத்தியாயமும் எனும்
மூடநம்பிக்கை......!
கோபங்களுக்கான தீர்வென
கூடாரங்களைத்தேடிய
குழந்தைப்பருவம்..
அனுபவம் பெறாத வயது
இளமையின் துடிப்பில் இயங்கிய இருதயம்
உயிர் இரசாயனங்கள் அந்தப் பருவத்தில்
என்னை முட்டாளாக்கியது...
பெற்றோரைவிட காதல் பெரிதென்று
வாதம் செய்தேன்......
அவர்களைத் தூக்கித் தொலைவிலிட்டு
எதையோ சாதித்து விடுவேனெனப்
புறப்பட்டேன்...!
பழிவாங்கும் படலமாக அதை நினைத்தேன்...
சுற்றிக் கூட்டிய சுவர்களுக்கு நடுவில்...
தீண்டத்தகாத தேசப்பறவையாக
நான் சிறைவைக்கப்பட்டேன்...
ஒரு கூண்டுப்பறவை தேசத்தின் விடுதலைக்கு
சிறகை விரிக்கும் என்ற கனவுகள் கண்டேன்...
காதலின் தோல்வி வெறுப்பைத் தந்தது...
செத்துப்பார்க்க முயன்றேன் தோல்விகிடைத்தது
வாழ்வை ஏற்றுக்கொள்ள மறுத்தது...
யாருக்கும் தெரியாமல்
போவதற்கு எனக்குக் கிடைத்த இடம்.
அப்போது எல்லோருக்கும் அதுதான் களம்..
வெறுத்தவனை வேட்டையாடலாம் என்று
தப்பான கணக்கு, என் மனதில்
'சிறு பிள்ளை வேளாண்மை'
நான் சிந்திக்கவில்லை
ஓடினேன் ஓடினேன்...தேசமெல்லாம் ஓடி...
களைத்துச் சோர்ந்து..
கழுகின் பிடியில் அகப்பட்டேன்...
செட்டைகளைக் கிழித்தது...
தேகமெங்கும் ரணமாக்கித்
தெருவில் எறிந்தது...
என்காலம் என்னைக்
கசக்கி முடித்தது...
எழுந்து நடக்கவே முடியாமல்...
வீதியெல்லாம் உருண்டு....
வீடு வந்து சேர்ந்தேன்.
என் வீடு...அங்கில்லை...
என் கூடு... உடைந்து...ஒவ்வொரு குருவிகளாக...
எங்கோ பறந்துபோயின...
நான் பாதகத்தி...!
யாரைப் பழிவாங்க
யாரை விலைகொடுத்தேன்...?
என் நினைவைக் கொல்ல...
தம்மைக்கொன்று போய்விட்ட என் தாயும் தந்தையும்...
ஒரு பெண்ணான என்
உணர்வின் உயிர்க்கொதிப்பு...
பிழையாகி....ஒரு வரலாற்றின் சாபத்தை
நான் வாங்கிக்கொண்டேனோ?
பாலூட்டிய தாயும்.. தாங்கிக்கொண்ட தந்தையும்
நிழல்களாகிய வலி....உயிர்வரை சென்று...வதைத்தது
திரும்பிப் பார்க்க... இயலவில்லை...
நெருப்பில் உருகும் இரும்புக்கீற்றுக்களாய்...
இரத்தம் உருக...வாழ்வின் முடிவில் வந்து நின்றேன்.
செத்துவிடமுடியாத முறைமை.....வாழ்வதற்கு வற்புறுத்தும்.
வாழ்வதன் வலி..சொல்பவர்க்குப்புரியாது...
மரணம் இலகுவானது...பலருக்குப்புரியாது..
பெறுமதி மிக்கதெல்லாம் இழந்தாயிற்கு...
எந்தக்காதலுக்காக என் பாதை மாறியதோ
அக்காதலின்...மனிதன்...வாழ்வின் மகிழ்வை
அனுபவித்து...உயரத்தில் இருந்தான்....
என் தவறு...பலரின் வாழ்வைக் காவுகொண்டது..
அன்று....அவன் என்னைத் தூக்கி எறிந்த இடத்தில்...
நான் எழுந்து மீண்டும் நடந்திருந்தால்...
வேர்களை ஊன்றி முளைத்திருந்தால்....
என் வானம் இன்று விடிந்திருக்கும்....
என் கூட்டிலும் குருவிகள்...கலகலத்திருக்கும்
என் வாழ்வு பலருக்குப் பாடமாகட்டும்
ஏனென்றால் போருக்கான தீர்மானங்கள்
தோற்றுக்...காணாமல் போயின...
என்னைப்போல்...என்வாழ்வைப்போல.
போரில் நான் ஒரு பின்குறிப்பு..

ஆனந்தி


# கற்கண்டு ஓடை 2

(Cat Gun - –Do or Die)

கதை: இ.சு.முரளிதரன்

வரைகலை - மகேந்திரன் வினித்

திருப்பங்கள் நிறைந்த சித்திரத் தொடர்கதை




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org